

எம். எஸ். வசந்தகுமார்

# வயோதிப காலத்திலும் வழிநடத்தும் கர்த்தர்

71ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை

# வயோதிப காலத்திலும் வழிநடத்தும் கர்த்தர்

**71ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை**

வேதஆராய்ச்சியாளர்

**எம்.எஸ்.வசந்தகுமார்**

சத்தியவசனம்
9, வெங்கட்ராமன் தெரு
சின்ன சொக்கிக்குளம்
மதுரை 625 002
தமிழ்நாடு, இந்தியா.

# THE GOD
# WHO CARES FOR THE OLD

An Expository Study on Psalm 71

*Written by*

**M.S.VASANTHAKUMAR**

*Originally Published by*

**TAMIL BIBLE RESEARCH CENTRE**
48, Victoria Road, Walthamstow, London E17 4JU
Phone: 0044 (0)208 2814678
Email: vasanthakumarms@yahoo.co.uk
Web: tamilbibleresearchcentre.com

*This Special Indian Edition is Published by*

**SATHIYA VASANAM**
**9, Venkatraman Street,**
**Chinna Chokkikulam**
**Madurai 625 002, INDIA**
**Email: svmadurai@eth.net**

First Sri Lankan Edition:
June 2006, Copies: 3000
Second Indian Edition
January 2007, Copies: 2000

No part of this publication may be reproduced in any form without the prior permission of the author.
அனுமதியின்றி பிரதி பண்ணுவது தடைசெய்யப்பட்டுள்ளது

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 04 |
| 71ம் சங்கீதம் | 05 |
| அறிமுக உரை: | |
| வயோதிப காலத்திலும் வழிநடத்தும் கர்த்தர் | 07 |
| முதலாம் அத்தியாயம்: | |
| வயோதிப காலத்தின் நிலைமை | 12 |
| இரண்டாம் அத்தியாயம்: | |
| வயோதிப காலத்தின் நிறைவு | 20 |
| மூன்றாம் அத்தியாயம்: | |
| வயோதிப காலத்தின் நிச்சயம் | 40 |
| உசாத்துணை நூல்கள் | 51 |
| ஆசிரியரின் பிற நூல்கள் | 53 |
| ஆசிரியரின் நூல்கள் கிடைக்குமிடங்கள் | 54 |



# ஆசிரியர் உரை

இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் முதலில் என்னுடைய வாழ்த்துக்களை உங்களுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். 71ம் சங்கீதத்திற்கான விளக்கவுரையாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இது ஆரம்பத்தில், லண்டனிலுள்ள "தமிழ் வேதாகம ஆராய்ச்சி மையத்தின்" மூலம் 2006ம் ஆண்டு இலங்கையில் வெளியிடப்பட்டது. அப்பொழுது இந்நூலை வெளியிடுவதற்கு உதவி செய்த நோர்வே நாட்டிலுள்ள "இரட்சிப்பின் சுவிசேஷசச் சபையின்" பாஸ்டர் போல் ஜெயந்தனுக்கும், தற்பொழுது இந்தியாவில் இந்நூலை வெளியிடும் மதுரை "சத்திய வசனம்" நிலையத்தினருக்கும், இந்நூலின் மூலப்பிரதியை வாசித்து அச்சுப்பிழைகளைத் திருத்துவதில் உதவிய சகோதரன் சதீஷ் அம்பிகைபாகன், சகோதரிகள் சசி கிறிஸ்டோபர், செல்வி ராமச்சந்திரன் என்போருக்கும் என்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூல் இலங்கையில் வெளியிடப்பட்டபோது, இலங்கையில் மாத்திரமல்ல, உலகின் பல பகுதிகளிலும் வாழும் தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கு அதிக பயனுடையதாக இருந்ததைப் போலவே, தற்பொழுது இந்தியாவிலுள்ள அருமையான தமிழ் பேசும் கிறிஸ்தவர்களுக்கும் இந்நூல் மிகுந்த அசீர்வாதமாக இருக்கும் என்று நம்புகின்றேன். இந்நூலைப்பற்றிய உங்களுடைய கருத்துக்களையும், இதன் மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களையும் எமக்குத் தெரிவிப்பதோடு, இதை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

அன்புடன்,
**எம்.எஸ்.வசந்தகுமார்.**



# 71ம் சங்கீதம்

1. கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன். நான் ஒருபோதும் வெட்கம் அடையாதபடி செய்யும்.
2. உமது நீதியினிமித்தம் என்னை விடுவித்து, என்னைக் காத்தருளும். உமது செவியை எனக்குச் சாய்த்து, என்னை இரட்சியும்.
3. நான் எப்பொழுதும் வந்தடையத்தக்க கன்மலையாயிரும். என்னை இரட்சிப்பதற்குக் கட்டளையிட்டீரே. நீரே என் கன்மலையும் என் கோட்டையுமாய் இருக்கிறீர்.
4. என் தேவனே, துன்மார்க்கனுடைய கைக்கும், நியாயக்கேடும் கொடுமையுமுள்ளவனுடைய கைக்கும் என்னைத் தப்புவியும்.
5. கர்த்தராகிய ஆண்டவரே, நீரே என் நோக்கமும், என் சிறு வயது தொடங்கி என் நம்பிக்கையுமாயிருக்கிறீர்.
6. நான் கர்ப்பத்தில் உற்பவித்தது முதல் உம்மால் ஆதரிக்கப் பட்டேன். என் தாயின் வயிற்றிலிருந்து என்னை எடுத்தவர் நீரே. உம்மையே நான் எப்பொழுதும் துதிப்பேன்.
7. அநேகருக்கு நான் ஒரு புதுமை போலானேன். நீரோ எனக்குப் பலத்த அடைக்கலமாயிருக்கிறீர்.
8. என் வாய் உமது துதியினாலும், நாள்தோறும் உமது மகத்துவத்தி னாலும் நிறைந்திருப்பதாக.
9. முதிர்ந்த வயதில் என்னைத் தள்ளிவிடாமலும், என் பெலன் ஒடுங்கும்போது என்னைக் கைவிடாமலும் இரும்.
10. என் சத்துருக்கள் எனக்கு விரோதமாய்ப் பேசி, என் ஆத்து மாவுக்குக் காத்திருக்கிறவர்கள் ஏகமாய் ஆலோசனைபண்ணி:
11. தேவன் அவனைக் கைவிட்டார், அவனைத் தொடர்ந்துபிடியுங்கள். அவனை விடுவிப்பார் இல்லை என்கிறார்கள்.
12. தேவனே, எனக்குத் தூரமாயிராதேயும். என் தேவனே, எனக்குச் சகாயம்பண்ணத் தீவிரியும்.
13. என் ஆத்துமாவை விரோதிக்கிறவர்கள் வெட்கி அழியவும்,

எனக்குப் பொல்லாப்புத் தேடுகிறவர்கள் நிந்தையாலும் இலச்சையாலும் மூடப்படவுங்கடவர்கள்.

14. நானோ எப்பொழுதும் நம்பிக்கைகொண்டிருந்து, மேன்மேலும் உம்மைத் துதிப்பேன்.

15. என் வாய் நாள்தோறும் உமது நீதியையும் உமது இரட்சிப்பையும் சொல்லும். அவைகளின் தொகையை நான் அறியேன்.

16. கர்த்தராகிய ஆண்டவருடைய வல்லமையை முன்னிட்டு நடப்பேன். உம்முடைய நீதியைப்பற்றியே மேன்மை பாராட்டுவேன்.

17. தேவனே, என் சிறுவயது முதல் எனக்குப் போதித்து வந்தீர். இதுவரைக்கும் உம்முடைய அதிசயங்களை அறிவித்துவந்தேன்.

18. இப்பொழுதும் தேவனே, இந்தச் சந்ததிக்கு உமது வல்லமையையும், வரப்போகிற யாவருக்கும் உமது பராக்கிரமத்தையும் நான் அறிவிக்குமளவும், முதிர்வயதும் நரைமயிருமுள்ளவனாகும் வரைக்கும் என்னைக் கைவிடீராக.

19. தேவனே, உம்முடைய நீதி உன்னதமானது, பெரிதானவைகளை நீர் செய்தீர். தேவனே, உமக்கு நிகரானவர் யார்?

20. அநேக இக்கட்டுகளையும் ஆபத்துகளையும் காணும்படி செய்த என்னை நீர் திரும்பவும் உயிர்ப்பித்து, திரும்பவும் என்னைப் பூமியின் பாதாளங்களிலிருந்து ஏறப்பண்ணுவீர்.

21. என் மேன்மையைப் பெருகப்பண்ணி, என்னை மறுபடியும் தேற்றுவீர்.

22. என் தேவனே, நான் வீணையைக் கொண்டு உம்மையும் உம்முடைய சத்தியத்தையும் துதிப்பேன். இஸ்ரவேலின் பரிசுத்தரே, சுரமண்டலத்தைக் கொண்டு உம்மைப் பாடுவேன்.

23. நான் பாடும்போது என் உதடுகளும், நீர் மீட்டுக்கொண்ட என் ஆத்துமாவும் கெம்பீரித்து மகிழும்.

24. எனக்குப் பொல்லாப்பைத் தேடுகிறவர்கள் வெட்கி இலச்சையடைந்தபடியால், நாள்தோறும் என் நாவு உமது நீதியைக் கொண்டாடும்.





# அறிமுக உரை

## 71ம் சங்கீதம்

# வயோதிப காலத்திலும் வழிநடத்தும் கர்த்தர்

மானிட வாழ்வில் முதுமைப் பருவம் எவரும் விரும்பாத கடினமான ஒரு காலப் பகுதியாக உள்ளது. மனிதர்கள் மறுபடியும் குழந்தைப் பருவத்திற்குச் செல்ல ஆசைப்பட்டாலும், எவருமே வயோதிபராவதை விரும்புவதில்லை. தற்கால வாலிபர்கள் வயோதிபர்களாகி வருத்தப்படுவதற்கு முன்பே மரித்துவிட வேண்டும் என்று எண்ணுகின்றனர்.[1] வயோதிபர்களோ மறுபடியும் வாலிபர்களாக மாற ஆசைப்படுகின்றனர்.[2] பொதுவாக மனிதர்கள்

---

[1] D.Thomas, *Help for Hurting Christians: Reflections on Psalms*, p. 91.

[2] அண்மைக் காலத்தில் அதிகமாக விற்பனையாகிய ஆங்கிலப் புத்தகங்களில் ஒன்று "பத்து வயது குறைவாகத் தோற்றமளிப்பதற்கான வழிமுறைகள்" என்னும் தலைப்பைக் கொண்டிருந்தது.

எப்பொழுதும் வாலிபர்களாகவே இருக்க விரும்புகின்றனர். ஆனால், நடைமுறையில் இது எவ்விதத்திலும் சாத்தியமற்ற காரியமாகும். கனவுலகில் தாங்கள் வாலிபர்களாக இருப்பதாக மனிதர் மகிழ்வடைந்தாலும், நிஜவாழ்க்கையில் வயோதிபராவதை எதனாலும் தடுக்க முடியாது. மனிதர்களாகப் பிறந்த நாம் அனைவரும் வயோதிபத்தை நோக்கியே சென்று கொண்டிருக் கின்றோம். ஒவ்வொரு நாளும் வாலிபம் நம்மைவிட்டுத் தூரமாகச் செல்வதோடு, வயோதிபம் நம்மிடம் நெருங்கி வருகின்றது.

கடந்த நூற்றாண்டுகளில் வயோதிபர்கள் முக்கியமானவர்களாகக் கருதப்பட்டார்கள். இதனால், அவர்கள் அதிக மதிப்புடனும் மரியாதையுடனும் நடத்தப்பட்டனர். வயோதிபர்கள் வாழ்க்கை யின் சகல துறைகளிலும் அதிக அறிவும் அனுபவமும் உடைய வர்களாகக் கருதப்பட்டமையால், அவர்களுடைய ஆலோசனை யையும், ஆசீர்வாதத்தையும் பெறுவதற்கு மற்றவர்கள் அவர் களிடம் வந்தனர். ஆனால் தற்காலத்தில் நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. வயோதிபர்கள் ஒன்றும் தெரியாதவர்கள் என்னும் எண்ணம் தற்கால இளம் தலைமுறையினர் மத்தியில் உருவாகி உள்ளது. முதியவர்கள் தற்கால விஞ்ஞான தொழிநுட்ப அபிவி ருத்திக்கு ஈடுகொடுக்க முடியாத, அறிவும் நாகரீகமும் அற்ற பின்தங்கிய குழுவினர் என்னும் எண்ணம் இளைஞர்களுடைய மனதில் உள்ளது. இதனால், வயோதிபரின் ஆலோசனையோ ஆசீர்வாதமோ இளம் தலைமுறையினரால் நாடப்படுவதில்லை. தற்கால சமுதாயங்களில் வயோதிபர்கள் புறக்கணிக்கப்பட்டவர்க ளாகவும், தேவையற்றவர்களாகவுமே கருதப்படுகின்றனர். இத னால் வயோதிப காலத்தைப் பொதுவாக மனிதர்கள் விரும்பு வதில்லை.

வயோதிப காலத்தில் மனிதர்கள் நம்மைப் புறக்கணித்து ஒதுக்கினாலும், தேவன் நம்மோடுகூட இருந்து, நம்மை வழிநடத் துகிறவராக இருக்கின்றார். சமுதாயம் வயோதிபர்களை நாட்டுக்

குத் தேவையற்ற சுமைகள் என்று நினைத்தாலும், தேவன் வயோதிபரைப் பெறுமதியானவர்களாகக் கருதுகின்றார். தேவனுடைய பார்வையில் வயோதிபர்கள் கனம் பெற்றவர்களாகவே இருக்கின்றனர். இதனால், தேவன் நம்மை முதிர்வயது வரைக்கும் தாங்குகிறவராக இருப்பேன் என்று வாக்களித்துள்ளார் (ஏசா.46:3-4). உண்மையில், தேவனை நம்பி வாழ்கிறவர்கள் "முதிர் வயதிலும் கனி தந்து புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள்" (சங்.92:15). எனவே, கிறிஸ்தவர்களாகிய நாம் வயோதிப காலத்தைப்பற்றி கவலைப்படுவதில் எவ்வித அர்த்தமுமில்லை. இதுவரையில் நம்மை வழிநடத்தி வந்த தேவன், வயோதிப காலத்தில் நம்மைக் கைவிடமாட்டார். ஏனெனில் அவர் உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நம்மோடு கூட இருப்பவர் (மத். 28:20). அவர் ஒருநாளும் நம்மைவிட்டு விலகுவதும் இல்லை நம்மைக் கைவிடுவதுமில்லை (எபி.13:5).

பழைய ஏற்பாட்டிலுள்ள சங்கீதப் புத்தகத்தில் 71ம் சங்கீதம் வயோதிபர் ஒருவருடைய ஜெபமாக உள்ளது. வேத ஆராய்ச்சியாளர்கள் இதை "வயோதிப விசுவாசியின் ஜெபம்"[3] என்று அழைப்பது வழக்கம். சங்கீதப் புத்தகத்திலுள்ள பெரும்பாலான பாடல்களை எழுதிய தாவீது, வயோதிப காலத்தில் இதை எழுதியுள்ளதை சங்கீதத்தின் வசனங்கள் அறியத்தருகின்றன (சங்.71:9,18). சிறு வயதிலிருந்து தன்னை வழிநடத்தி வந்த தேவன், வயோதிப காலத்திலும் நிச்சயமாகத் தன்னை வழிநடத்துவார் என்னும் நம்பிக்கையுடன் தாவீது இச்சங்கீதத்தை எழுதியுள்ளான் (சங்.71:5-6). எனவே, இச்சங்கீதத்தை ஆராய்ந்து படிக்கும்போது வயோதிப காலத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் நம்மையும் தேவன் நிச்சயமாக வழிநடத்துவார் என்னும் நம்பிக்கை ஏற்படுவதை எவராலும் மறுக்க முடியாது. உண்மையில், வயோதிப காலத்தில் தேவனை நம்பி வாழ்வதற்கும்,

[3] C.H.Spurgeon, *The Treasury of David: Updated Edition*, p. 604.

அவருடைய வழிநடத்துதலை அனுபவித்து மகிழ்வதற்கும் இச் சங்கீதம் நமக்கு உதவி செய்கின்றது.

71ம் சங்கீதம் தலைப்பில்லாமல் இருப்பதனால் இது 70ம் சங்கீதத்தின் தொடர்ச்சியாகவே ஆரம்பத்தில் இருந்திருக்க வேண்டும் என்று சிலர் கருதுகின்றனர்.[4] பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில் "தாவீதின் சங்கீதம்" என்னும் தலைப்பு இதற்குக் கொடுக்கப்பட்டுள்ளது. தாவீதின் சங்கீதங்களில் காணப் படும் பல சொற்பிரயோகங்கள் இச்சங்கீதத்தில் இருப்பதனால், இது தாவீதினால் எழுதப்பட்டது என்று வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.[5] இச்சங்கீதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் இசைக் கருவிகளை ஆதாரமாகக் கொண்டு (சங்.71:22), ஆலயப் பாட கர்களில் ஒருவனே இச்சங்கீதத்தை எழுதியிருக்கவேண்டும் என்று சிலர் கூறுகின்றனர்.[6] எரேமியா அல்லது சாமுவேல் இச்சங்கீதத்தை எழுதியிருக்கலாம் என்றும் சிலர் கருதுகின்றனர்.[7] யூதர்கள் பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த பின்னர் இச்சங்கீதம் எழுதப்பட்டிருக்கலாம் என்பது சிலரது நம்பிக்கையாக உள்ளது.[8] எனினும், தாவீதே இச்சங்கீதத்தை

---

[4] வேதாகமத்தின் பல பழைய கையெழுத்துப் பிரதிகளில் தலைப்பில்லா மல் இருக்கும் சில சங்கீதங்கள் அதற்கு முன் உள்ள சங்கீதத்தின் தொடர்ச்சியாக இருப்பதை நாம் காணலாம். உதாரணத்திற்கு 10ம் சங்கீதம் 9ம் சங்கீதத்துடனும், 33ம் சங்கீதம் 32ம் சங்கீதத்துடனும், 43ம் சங்கீதம் 42ம் சங்கீதத்துடனும், 71ம் சங்கீதம் 70ம் சங்கீதத்துடனும் தொடர்புள்ள நிலையில் உள்ளது

[5] சிலர் இதை ஏற்றுக்கொள்வதில்லை. தாவீதின் சங்கீதங்களை நன்றாக அறிந்திருந்த ஒருவர் இச்சங்கீதத்தை எழுதியதினாலேயே, இதில் தாவீ தின் சங்கீதங்களிலுள்ள சொற்பிரயோகங்கள் உள்ளன என்று இவர்கள் கூறுகின்றனர் (D. Kidner, *Psalms 1-72: Tyndale Old Testament Comment aries*, p. 250). ஆனால், சொற்பிரயோகங்களில் மட்டுமல்ல, கருத்துகளிலும் இதற்கும் 71ம் சங்கீதத்திற்கும் இடையில் ஒற்றுமைகள் இருப்பதனால் இது தாவீதினால் எழுதப்பட்டது என்பதை மறுக்கமுடியாதுள்ளது.

[6] S.Terrien, *The Psalms: Theological Commentary*, p. 511.

[7] W.G.Scroggie, *A Guide to the Psalms Volume 2*, p. 124.

[8] A.A.Anderson, *Psalms Volume 1: New Century Bible*, p. 511.

எழுதினான் என்பதே பெரும்பாலான வேத ஆராய்ச்சியாளர்களின் முடிவாக உள்ளது. தாவீதின் ஏனைய சங்கீதங்களுக்கும் இதற்கும் மொழிநடையிலும் கருத்துக்களிலும் இருக்கும் ஒற்றுமை இதை உறுதிப்படுத்துகிறது.[9]

தாவீது வயோதிப காலத்தில் ஏறெடுத்த ஜெபமான 71ம் சங்கீதம், வயோதிப காலத்தின் நிலைமையையும், அவன் தேவன் மேல் வைத்திருந்த நம்பிக்கை காரணமாக அவனுடைய வாழ்க்கை மனநிறைவுடன் இருந்ததையும் அறியத்தருகின்றது. உண்மையில், இச்சங்கீதத்தை ஆராய்ந்து படிக்கும்போது, வயோதிபர்களும், வயோதிப காலத்தை நோக்கிச் சென்றுகொண்டிருப்பவர்களும், தங்களுடைய முதிர் வயதில் மனமகிழ்வுடன் வாழ்வதற்கான வழிகளை அறிந்துகொள்ளலாம். மேலும், சகல மனிதரும் வயோதிபராவது நிச்சயம் என்பதனால், இச்சங்கீதம் நாம் அனைவரும் ஆராய்ந்து படிக்கவேண்டிய வேதப்பகுதியாக உள்ளது. எனவே, தாவீது வயோதிப காலத்தில் ஏறெடுத்த ஜெபமான 71ம் சங்கீதத்தை இச்சிறு நூலில் ஆராய்ந்து பார்ப்போம்.



[9] 22ம் 31ம் சங்கீதங்களைத் தழுவியே 71ம் சங்கீதம் எழுதப்பட்டுள்ளதாகச் சிலர் கருதுகின்றனர். இவ்விரு சங்கீதங்களும் இயேசுகிறிஸ்துவின் மரணத்தைப் பற்றிய முன்னறிவிப்புகளைக் கொண்டுள்ளமையால், 71ம் சங்கீதத்தையும் இயேசுகிறிஸ்துவின் பாடுகளையும் மரணத்தையும் நினைவுகூரும் காலத்திற்கான சங்கீதமாக, குறிப்பாக பரிசுத்த வாரத்தில் செவ்வாய்க்கிழமைக்கான சங்கீதமாகக் கிறிஸ்தவ சபை தெரிவுசெய்துள்ளது (J.L.Mays, *Psalms: Interpretation*, p. 234). ஆனால், 71ம் சங்கீதம் வயோதிப காலத்தில் ஏறெடுக்கப்பட்ட ஒரு ஜெபமாகவே உள்ளது.

# முதலாம் அத்தியாயம்



## சங்கீதம் 71:7,9-11

# வயோதிப காலத்தின் நிலைமை

மானிட வாழ்க்கையில் குழந்தைப் பருவம் மகிழ்ச்சிகரமானதாக வும், இளமைக்காலம் இன்பமயமானதாகவும் இருந்தாலும், வயோதிப காலம் பாடுகளினாலும் வருத்தங்களினாலும் நிறைந் துள்ளது. 71ம் சங்கீதத்தை எழுதிய தாவீது, தன்னுடைய வயோதிப காலத்தில் பலவிதமான பாடுகளையும் துன்பங்களை யும் அனுபவித்தவனாகவே இருந்துள்ளான். அவன் தன்னுடைய வயோதிப காலத் துயரங்களை இச்சங்கீதத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளான். உண்மையில், தாவீது குறிப்பிடும் துயரங்கள், வயோதிப காலத்தில் மனிதர்கள் அனைவரும் எதிர்நோக்கும் பிரச்சினைகளாகவே உள்ளன. இவற்றை இவ்வத்தியாயத்தில் ஆராய்ந்து பார்ப்போம்.

# 1. சரீரம் பலவீனமடையும் காலம்



வயோதிப காலம் சரீரப்பிரகாரமான பலம் குறைவடையும் காலமாக உள்ளது. சரீர பலவீனத்தோடு சேர்ந்து சரீரச் செயற் பாடுகளும் வயோதிப காலத்தில் குறைவடைந்து போகின்றன. வயோதிப காலத்தில் தாவீது "தன்னுடைய பெலன் ஒடுங்குவ தாக" 9ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளான். இதனால் தன்னைக் கைவிடாதிருக்கும்படி அவன் தேவனிடம் மன்றாடினான்:

முதிர்ந்த வயதில்
என்னைத் தள்ளிவிடாமலும்,
என் பெலன் ஒடுங்கும்போது
என்னைக் கைவிடாமலும் இரும் (சங்கீதம் 71:9).

வயோதிப காலத்தைக் குறிப்பிட தாவீது இவ்வசனத்தில் இரண்டு சொற்பிரயோகங்களை உபயோகித்துள்ளான். இவற்றில் ஒன்று "முதிர்ந்த வயது." மற்றது, "பெலன் ஒடுங்கும்போது" என்பதா கும். இதிலிருந்து, வயோதிப காலத்தில் சரீர பெலன் குறைவ டைந்துபோவது தெளிவாகின்றது. இதனால் சரீரத்தின் அவயவங் கள் இளமைக் காலத்தில் செயற்பட்டவிதமாகச் செயற்படுவதில் லை. மேலும், பலவிதமான வியாதிகளும் சரீரத்தில் ஏற்படத் தொடங்குகின்றன. இது, வாழ்க்கையில் பெரும் சிரமங்களையும் சிக்கல்களையும் கொண்டு வருகின்றன.

வயோதிப காலத்தில் தாவீது சரீர பெலன் குறைவடைந்த நிலையில் இருந்தமையால், அவனுக்குத் தேவனுடைய வல்ல மை அவசியமாயிருந்தது. இனிமேல் தன்னுடைய சரீர பெலத் தினை அதிகரிக்க முடியாது என்பதை அறிந்திருந்த அவன், தேவனுடைய பெலத்தில் முழுமையாக சார்ந்திருக்க விரும்பி னான். இதனால், "தன்னைத் தள்ளிவிடாமலும் கைவிடாமலும்

இருக்கும்படி" அவன் தேவனிடம் மன்றாடினான். இளமைக் காலத்தில் மற்றவருடைய உதவிகள் எதுவுமின்றி நம்மால் சுயமாக எல்லாவற்றையும் செய்யக்கூடிய பெலன் நமக்கு இருந்திருக்கலாம். ஆனால் வயோதிப காலத்தில் நமக்கு மற்ற வரின் உதவி மிகவும் அவசியமானது. எனினும், சில நேரங்களில் நமக்கு உதவி செய்வதற்கு மனிதர்கள் இல்லாமல் போய் விடலாம். ஆனால் தேவன் எப்பொழுதும் நமக்கு உதவி செய்கிற வராகவும் நம்மை பெலப்படுத்துகிறவராகவும் இருக்கின்றார். இதனால் வயோதிப காலத்தில் நாம் தேவனுடைய பெலத் தையே முழுமையாக சார்ந்திருக்க வேண்டும். வயோதிப காலத் தில் "சரீர பெலனை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் இருக்கின் றதா என்று தேடியலைவதைவிட, தேவனுடைய வல்லமையில் சார்ந்திருப்பதே நல்லது."[1]

நம்முடைய சரீரம் பலவீனமடையும்போது தேவன் நம்மை பலப்ப டுத்துகிறவராக இருக்கின்றார். இதற்கு அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கை சிறந்த உதாரணமாக உள்ளது. எப்பொழு தும் வேதனையைக் கொடுக்கும் சரீரப்பிரகாரமான வியாதி அல்லது பலவீனத்துடன் அவர் இருந்தார். அவர் இதைத் தன் னுடைய "மாம்சத்தில் இருக்கும் முள்" என்று குறிப்பிட்டுள்ளார் (2கொரி.12:7).[2] பவுலினுடைய சரீர பலவீனத்தைத் தேவன்

---

[1] G.H.Wilson, *Psalms Vol. 1: The NIV Application Commentary*, p. 981.
[2] ஊழியப் பணியில் தன்னை எதிர்த்தவர்களையே பவுல் முள்ளாக இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளதாகச் சில வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர் (T.Y.Mullians, "Paul's Thorn in the Flesh" pp. 299-303; R.V.G.Tasker, *2Corinthians: Tyndale New Testament Commentaries*, p. 176). ஆனால், முள் தன்னுடைய மாம்சத்தில் இருப்பதாகப் பவுல் குறிப்பிட்டுள்ளமையால், இவ்விளக்கத்தை ஏற்றுக்கொள்ளமுடியாமலுள் ளது. இதனால் சிலர் முள்ளை "மாம்சத்தில் ஏற்படும் சோதனைகளாக வும்" (J.Calvin, *New Testament Commentaries: 2Corinthians and Timothy, Titus & Philemon*, p. 159), சிலர் 1கொரி.2:1-5, 2கொரி.10:10 போன்ற வசனங்களை ஆதாரமாகக் கொண்டு, "பவுல் பேச்சாற்றலற்ற திக்குவாயனாக இருந்ததையும்" (W.K.L.Clarke, *New Testament*

நீக்காதபோதிலும், அதைத் தாங்கிக் கொள்ளக்கூடிய வல்லமையை அவருக்குக் கொடுத்து, "என் கிருபை உனக்குப்போதும். பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" என்று வாக்களித்திருந்தார் (2கொரி.12:8-9). இதனால் வியாதியினால் சரீரம் வேதனையுடன் இருந்த போதிலும், பவுல் தேவனுடைய வல்லமையினால் வாழக்கூடியவராகவும், "நான் பலவீனமாயிருக்கும் போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்" (2கொ ரி.12:10) என்றும், "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலி.4:11-13) என்று கூறக்கூடியவராகவும் இருந்தார். வயோதிப காலத்தில் நம் சரீரம் பலவீனமடைந்தாலும், நம்முடைய அன்றாட கடமைகளைச் செய்வதற்குத் தேவையான பெலத்தைத் தேவன் நிச்சயம் நமக்கும் தருவார் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

## 2. சத்துருக்கள் பரிகசிக்கும் காலம்



வயோதிப காலம் சரீரம் பலவீனமடையும் காலமாக மட்டுமல்ல மற்றவர்கள், குறிப்பாக நம்முடைய சத்துருக்கள் நம்மைப்

---

*Problems*, pp, 136-140), வேறு சிலர் கலாத்தியர் 4:13-15, அப்போஸ்தலர் 23:5, 9:9, 9:18 என்னும் வசனங்களை ஆதாரமாகக் கொண்டு அவருக்கு கண்களில் நோய் இருந்ததாகவும் விளக்கியுள்ளனர் (L.L.Belleville, *2Corinthians: The IVP New Testament Commentary*, p. 306). பவுலுக்கு அடிக்கடி மலேரியாக் காய்ச்சல் ஏற்பட்டதாகவும் இதுவே அவர் குறிப்பிடும் மாம்சத்தில் உள்ள முள் என்றும் சிலர் குறிப்பிட்டுள்ளனர் (W.M. Ramsay, *St.Paul the Traveller and Roman Citizen*, pp. 94-97). பவுலுக்கு சரீரத்தில் என்ன வியாதி, அல்லது குறைபாடு இருந்தது என்பதை நம்மால் அறியமுடியாதுள்ளது. ஆனால், 2கொரிந்தியர் 12ம் அதிகாரத்தின் படி, எப்பொழுதும் சரீரத்திற்கு வேதனையைக் கொடுக்கும் ஒரு வியாதி அல்லது குறைபாடு பவுலுக்கு இருந்துள்ளதை மறுப்பதற்கில்லை. எனினும் இது பிறப்பிலிருந்து இருந்த குறைபாடு அல்ல. 2கொரிந்தியர் 12:7ன்படி, தேவனுடைய வெளிப்படுத்தல்களைப் பெற்ற பின்னர் ஏற்பட்ட நிலைமையாகவே இது உள்ளது.

பரிகசிக்கும் காலமாகவும் உள்ளது. அவர்கள் நமது சரீர பலவீனத்தையும், நம்முடைய நெருக்கடியான நிலையையும் பார்த்து நம்மைப் பரிகசிப்பவர்களாக இருப்பார்கள். தாவீது தன்னுடைய நிலையைப் பற்றி 7ம் வசனத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளான்:

அநேகருக்கு நான்
ஒரு புதுமை போலானேன்
நீரோ எனக்குப் பலத்த
அடைக்கலமாயிருக்கிறீர் (சங்கீதம் 71:7).

இவ்வசனத்தில் "புதுமை" என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள "மொப்பெட்" (*mopet*) என்னும் எபிரேயச் சொல், "அற்புதம்" என்னும் அர்த்தமுடையது. அதாவது பார்ப்பவருக்கு அற்புதமாகத் தோன்றும் ஒரு காரியத்தை இச்சொல் குறிக்கின்றது. எனினும் வேதாகமத்தில் இது, தேவனுடைய அற்புதச் செயல்களை மட்டுமல்ல, தேவ சாபத்திற்கான அடையாளங்களைக் குறிப்பிடவும் உபயோகிக்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில், எகிப்தின் மீது வந்த வாதைகள் எத்தகையவை என்பதை விளக்கவும் இச்சொல்லே உபயோகிக்கப்பட்டுள்ளது. தாவீது இச்சொல்லை இவ்வாறு எதிரிடையான அர்த்தத்துடனேயே இவ்வசனத்தில் உபயோகித்துள்ளான்.[3] தாவீது வயோதிபனாகவும் வியாதிப்பட்டவனாகவும் இருந்தமையால், அவனுடைய எதிரிகள், அவன் தேவ சாபத்திற்கு உட்பட்டிருப்பதாக எண்ணி அவனைப் பரிகசித்தனர்.[4] எதிரிகளுடைய பார்வையில் அவன் தேவதண்டனையின் பயங்கரமான அடையாளமாக இருந்தான்.[5]

---

[3] D.Kidner, *Psalms 1-72: Tyndale Old Testament Commentaries*, p. 251.
[4] C.C.Broyles, *Psalms: New International Biblical Commentary*, p. 291; W.O.E.Oesterley, *The Psalms Translated with Text-Critical and Exegetical Notes*, p. 335; D.M.Williams, *Psalms 1-72: The Preachers Commentary*, p. 514.
[5] G.H.Wilson, *Psalms Volume 1: The NIV Application Commentary*, p. 971; A.A.Anderson, *Psalms: New Century Bible*, p. 513.

தேவனை நம்பி வாழ்ந்தவனை அவர் கைவிட்டுவிட்டார் என்னும் எண்ணத்தில் மற்றவர்கள் அவனைப் பரிகசித்தனர்.[6]

தன்னுடைய நிலமையைப் பார்த்து மற்றவர்கள் பரிகசித்தாலும், அவை எவ்விதத்திலும் தன்னைப் பாதிக்காதவிதத்தில் தேவன் தனக்கு அடைக்கலமாக இருப்பதாகவும் தாவீது இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளான். வேதாகமத்தில் "அடைக்கலம்" என்னும் சொல் ஆபத்துகளிலிருந்து பாதுகாப்பளிக்கும் இடங்களைக் குறிப்பிட உபயோகிக்கப்பட்டுள்ளது (ஏசா.4:6, 25:4, சங்.104:18). சங்கீதங்களில் ஆபத்திலிருந்து பாதுகாப்பளிப்பவராகத் தேவன் இருப்பதை அடைக்கலம் என்னும் சொல் குறிப்பிடுகின்றது. இச்சங்கீதத்தில், மற்றவர்களுடைய பரிகாசப் பேச்சுகள் தன்னை எவ்விதத்திலும் பாதிக்காதபடிக்குத் தேவன் தன்னைப் பாதுகாப்ப வராக இருப்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக, அவர் தனக்கு அடைக்கலமாக இருப்பதாகத் தாவீது குறிப்பிட்டுள்ளான்.

வயோதிப காலத்தில் மற்றவர்களுடைய வார்த்தைகளும், அவர் கள் நம்மை நடத்தும் விதமும் நம்மை அதிகம் பாதிக்கும். வயோதிப காலத்தில் மற்றவர்களுடைய பரிகசிப்புக்கு உட்படுவ தற்குப் பல காரணங்கள் உள்ளன. நம்முடைய வாழ்க்கைமுறை மற்றவர்களுக்கு நாகரீகமற்றதாகத் தென்படலாம். நம்முடைய பேச்சு, தற்கால நடைமுறைக்கு ஒத்துவராததாக இருக்கலாம். இளைய தலைமுறையினர் நம்முடைய பழக்கவழக்கங்களைப் பைத்தியக்காரத்தனமானவையாகக் கருதி நம்மைப் பரிகசிக்க லாம். இத்தகைய சந்தர்ப்பங்களில் தேவன் நமக்குப் பாதுகாப்ப ளிக்கும் அடைக்கலமாக இருக்கின்றார் என்பதை நாம் மறக்கலா காது. தேவன் நம்முடைய அடைக்கலமாக இருக்கும்போது, மற்றவர்களுடைய வார்த்தைகளும் செயல்களும் நம்மை எவ்விதத்திலும் பாதிக்காது.

---

[6] J.L.Mays, *Psalms: Interpretation*, p. 235.

# 3. சகலரும் பாராமுகமாயிருக்கும் காலம்




வயோதிப காலம் மற்றவர்களினால் கைவிடப்பட்டு சகலரும் பாராமுகமாயிருக்கும் காலமாகவும் உள்ளது. வாலிப காலத்தில் நம்மோடு நெருங்கிப் பழகிய நண்பர்களும் உறவினர்களும் வயோதிப காலத்தில் நம்மோடு இருப்பதில்லை. இனி நாம் பிரயோஜனமற்றவர்கள் என்று எண்ணி, மற்றவர்கள் நம்மைத் தனியே விட்டுச் சென்று விடுவார்கள். இதுவரை காலமும் நம் மிடமிருந்து உதவிகளைப் பெற்றவர்கள், இனிமேல் தங்களுக்கு எவ்வித உதவியும் கிடைக்காது என்பதனாலும், இனித் தாங்கள் நமக்கு உதவி செய்ய வேண்டும் என்பதனாலும் நம்மைத் தனியே விட்டு விடுவார்கள். சொந்தப் பிள்ளைகளும்கூட தங்க ளுக்கு என்று தனியான ஒரு குடும்பம் வந்துவிட்டதால், நம்மைத் தனியேவிட்டுச் சென்றுவிடலாம். இவ்வாறு சகலரும் நம்மைத் தனியே விட்டுச் செல்லும்போது, தேவனும் நம்மைக் கைவிட்டு விட்டார் என்னும் எண்ணத்தில் நம்முடைய எதிரிகள் நமக்கு எதிராகச் செயற்படுவார்கள். வயோதிப காலத்தில் அனைவரா லும் கைவிடப்பட்டுத் தனிமையாக இருந்த தாவீதின் வாழ்வும் இவ்விதமாகவே இருந்தது. இதைப் பற்றி அவன் 10ம், 11ம் வசனங்களில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளான்:

என் சத்துருக்கள்
எனக்கு விரோதமாய்ப் பேசி
என் ஆத்துமாவுக்குக் காத்திருக்கிறவர்கள்
ஏகமாய் ஆலோசனை பண்ணி
தேவன் அவனைக் கைவிட்டார்,
அவனைத் தொடர்ந்து பிடியுங்கள்.
அவனை விடுவிப்பார்
இல்லை என்கிறார்கள் (சங்கீதம் 71:10-11).

10ம் வசனத்தின் முதல் வரியில் உள்ள சத்துருக்களே அடுத்த வரியில் "ஆத்துமாவுக்குக் காத்திருக்கிறவர்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளனர். தாவீதின் எதிரிகள் அவனைக் கொல்லுவதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். தாவீது அனைவராலும் கைவிடப்பட்ட நிலையில் இருந்தமையால், அவனுக்கு உதவி செய்ய எவரும் வரமாட்டார்கள் என்னும் எண்ணத்தில் அவனை அழிப்பதற்கு அவனுடைய எதிரிகள் முயற்சி செய்தனர். தாவீது அச்சமயம் வியாதிப்பட்டவனாக இருந்ததாகவும் சில வேதஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.[8] முதுமையும் வியாதியும் சரீரத்தை வாட்டிக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் தாவீது எதிரிகளின் தாக்குதல்களுக்கு உட்பட்டான். வியாதியும் எதிரிகளின் செயல்களும் அவனை மரணத்தின் வாசலில் கொண்டுவந்து வைத்திருந்தன.[9]

தாவீது குறிப்பிட்டுள்ளவிதமாக மானிட வாழ்க்கையில் வயோதிப காலம் பலவிதமான பாடுகளும் வருத்தங்களும் நிறைந்துள்ள காலப்பகுதியாகவே உள்ளது. சரீர பலவீனம், வியாதிகள், தனிமை, சுயமாகச் செயற்படுவதில் உள்ள சிரமங்கள் என்பன வயோதிப காலத்தைக் கசப்பானதாக மாற்றிவிடுகின்றன. ஆனாலும், தாவீதுக்குத் தேவன் அடைக்கலமாகவும் ஆதரவாகவும் இருந்ததினால், அவன் வயோதிப காலத்திலும் மனநிறைவுடன் இருந்துள்ளதை 71ம் சங்கீதம் அறியத்தருகின்றது. இதைப் பற்றி அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம்.



[8] D.M.Williams, *Psalms 1-72: The Preacher's Commentary*, p. 512.
[9] A.A.Anderson, *Psalms Volume 1: New Century Bible*, p. 511.

# இரண்டாம் அத்தியாயம்



## சங்கீதம் 71:1-6,14-18

# வயோதிப காலத்தின் நிறைவு

வயோதிப காலம் வருத்தங்களும் பாடுகளும் நிறைந்துள்ள கடினமான காலப் பகுதியாக உள்ளபோதிலும், அக்காலத்தில் மனக்கலக்கமும் குழப்பமும் அடையாமல் தாவீது மனநிறைவு டன் வாழ்ந்துள்ளான். நெருக்கடியான சூழ்நிலைகளில் அவன் எழுதிய சங்கீதங்களில், ஆரம்ப வசனங்கள் அழுது புலம்பும் நிலையில் இருந்தாலும், ஏனைய வசனங்களில், தேவன் மீது அவனுக்கு இருக்கும் நம்பிக்கையையும், அந்நம்பிக்கை காரண மாக அவனுடைய மனம் கலக்கமும் குழப்பமும் இல்லாமல் அமைதியுடன் இருக்கும் நிலையையும் நாம் காணலாம். தாவீது வயோதிபனாக இருந்த காலத்தில் தன்னுடைய நிலைமை எப்படி இருக்கின்றது என்பதைத் தேவனிடம் தெரிவித்தாலும்,

தேவன் தன்னை பெலப்படுத்தி வழிநடத்துவார் என்னும் நம்பிக் கையுடன் அவன் இருந்துள்ளதை 71ம் சங்கீதம் அறியத்தருகின் றது.

71ம் சங்கீதத்தின்படி, வயோதிப காலத்தில் தாவீது தேவனை முழுமையாக நம்பி வாழ்ந்ததோடு, இதுவரையில் தன்னைப் பாதுகாத்துப் பராமரித்து வந்த தேவனுக்கு எப்பொழுதும் நன்றி செலுத்துகிறவனாகவும், தேவனையும் அவருடைய செயல்களை யும் மற்றவர்களுக்கு அறிவிப்பவனாகவும் இருந்துள்ளான். வயோதிப காலத்தில் தாவீது மனநிறைவுடன் இருந்ததற்கு அவன் இவ்வாறு வாழ்ந்ததே காரணமாகும். தாவீதினுடைய வயோதிப கால வாழ்வைப்பற்றி இவ்வத்தியாயத்தில் ஆராய்ந்து பார்ப்போம்.

# 1. தேவனை நம்பியவனாக இருந்தான்



வயோதிப காலத்திலும் தாவீது மனநிறைவுடன் இருந்ததற்கான முதலாவது காரணம் அவன் தேவனை நம்பி வாழ்ந்ததேயாகும். தேவனை நம்புகிறவர்கள் ஒருநாளும் வெட்கப்பட்டுப் போவதில் லை என்பதை அறிந்திருந்த அவன், தேவனையே முழுமையாக நம்பி வாழ்ந்தான். 71ம் சங்கீதம், தாவீது தேவன்மேல் வைத்தி ருந்த நம்பிக்கையை வெளிப்படுத்தும் விதத்தில் ஆரம்பமாகிறது:

கர்த்தாவே,
உம்மை நம்பியிருக்கிறேன்
நான் ஒருபோதும்,
வெட்கம் அடையாதபடி செய்யும்
(சங்கீதம் 71:1).

நெருக்கடியான சூழ்நிலைகளில் பக்தர்கள் தேவன் மேல் தங்களு டைய நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளதைப் பல சங்கீதங்க

ளில் நாம் காணலாம் (சங்.7:2, 11:1, 16:1, 25:20, 31:2, 57:2). இவை, உயிராபத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகத் தேவ னுடைய ஆலயத்தில், அல்லது அடைக்கலப் பட்டணத்தில் தஞ்சமடையும் அக்கால பழக்கத்தை (யாத். 21:13, 1ராஜா.1:49-53) அடிப்படையாகக் கொண்ட நம்பிக்கையாக உள்ளது.[1] அதாவது, உயிராபத்திலிருந்து தப்புவதற்கு மனிதர் அக்காலத் தில் ஆலயத்திற்குள் அல்லது அடைக்கலப் பட்டணத்திற்குள் தஞ்சமடைவதுபோல சங்கீதக்காரர்கள், ஆபத்தான சூழ்நிலை களில் தேவன் மட்டுமே தங்களுக்குப் பாதுகாப்பைக் கொடுப் பார் என்னும் நம்பிக்கையுடன் அவரிடம் தஞ்சம் புகுந்துள்ளனர் (சங்.5:12, 31:20, 34:17, 37:40, 64:10, 118:8-9). வயோதிப காலத்தில் தாவீதும் ஆபத்தான ஒரு சூழ்நிலையில், தேவனால் மட்டுமே தன்னைப் பாதுகாக்க முடியும் என்னும் நம்பிக்கையுடன் இருந்துள்ளான். இத்தகைய நம்பிக்கை கிறிஸ்தவர்களாகிய நமக்கும் இருக்கவேண்டும். உண்மையில், தேவனே "நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக் காலத்தில் அநுகூலமான துணையுமானவர்" (சங்.46:1).

வயோதிப காலத்தில் தாவீது தேவனை முழுமையாக நம்பி வாழ்ந்ததற்கான காரணம், தேவன் எப்படிப்பட்டவர் என்பதை அவன் அறிந்திருந்ததேயாகும். தேவன் நீதியுள்ளவர் என்பதை அவன் அறிந்திருந்தான். இதனால், தன்னைக் காப்பாற்றுவதன் மூலம் நீதியைக் காண்பிக்கும்படி அவன் தேவனிடம் விண்ணப் பித்தான். இரண்டாம் வசனத்தில் இதைப்பற்றி அவன் குறிப்பிட் டுள்ளான்:

> உமது நீதியினிமித்தம் என்னை விடுவித்து,
> என்னைக் காத்தருளும்.
> உமது செவியை எனக்குச் சாய்த்து,
> என்னை இரட்சியும் (சங்கீதம் 71:2).

---

[1] M.E.Tate, *Psalms 51-100: Word Biblical Commentary Vol. 20*, p. 213.

தேவனைப் பற்றி வேதாகமம் அறியத்தரும் பிரதான சத்தியம் அவர் நீதியுள்ளவர் என்பதாகும் (உபா.32:4, 2நாளா.12:6, சங்.11:7, 89:14, 97:2, ஏசா.24:16, 2தீமோ.4:8, வெளி.16:5). "தேவன் எப்பொழுதும் சரியானதையே செய்வார் என்பதை இது அறியத் தருகின்றது."[2] உண்மையில், நீதியுள்ள தேவனுடைய செயல்கள் அனைத்தும் நியாயமானவைகளாகவே உள்ளன (1சாமு.12:7, சங்.103:6, 119:75, 145:7). இதனால் எப்பொழுதும் நியாயமாகச் செயற்படும் தேவன் குற்றமற்ற தன்னை விடுவித்து, தன் எதிரியை அழிப்பார் என்னும் நம்பிக்கையுடன் "உமது நீதியினிமித்தம் என்னை விடுவித்து என்னைக் காத்தருளும்" என்று மன்றாடினான். தாவீது தேவனுடைய நீதியைப் பற்றிப் பல தடவைகள் இச்சங்கீதத்தில் குறிப்பிட்டுள்ளான் (சங்.71:2, 15, 16, 19, 24). உண்மையில், "தேவன் எப்பொழுதும் நீதியாகச் செயற்படுவார் என்னும் நம்பிக்கையே தாவீது தேவனிடம் தஞ்சம் புகுவதற்கும், எதிரிகளிடமிருந்து தன்னைக் காப்பாற்றும்படி ஜெபிப்பதற்கும் காரணமாக இருந்தது."[3] தேவன் நீதியுள்ளவராக இருப்பதனால் அவருடைய செயல்கள் எப்பொழுதும் நியாயமானவைகளாகவே இருக்கும்.

தேவன் நீதியுள்ளவராய் இருப்பதனால் அவர் தன்னை எதிரியின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பார் என்னும் நம்பிக்கையுடன், அவர் தன்னுடைய கன்மலையும் கோட்டையுமாக இருப்பதாகத் தாவீது மூன்றாம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளான்:

நான் எப்பொழுதும் வந்தடையத்தக்க
கன்மலையாயிரும்.
என்னை இரட்சிப்பதற்குக்
கட்டளையிட்டீரே.
நீரே என் கன்மலையும்
கோட்டையுமாயிருக்கிறீர் (சங்கீதம் 71:3).

---

[2] C.R.Swindoll & R.B.Zuck, *Understanding Christian Theology*, p. 188.
[3] W.A.VanGemeren, *Psalms: Expositor's Bible Commentary Volume.5*, p. 464.

வேதாகமத்தில் 75 தடவைகள் “கன்மலை” என்னும் வார்த்தை உள்ளது. எனினும், இவற்றில் 33 தடவைகள் இச்சொல் தேவனை வர்ணிக்கும் உருவகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (சங்.18:2, 19:14, 62:2, 62:6, 71:3, 78:35, 94:22, 95:1). வேதாகமத்தில் இச்சொல் மிகப்பெரிய கற்பாறைகளை அல்லது கன்மலையைக் குறிப்பிடவே உபயோகிக்கப்பட்டுள்ளது. இத்தகைய கற்பாறைகளும் கன்மலைகளும் எவராலும் அசைக்கமுடியாதவைகளாகவும், எப்பொழுதும் நிலைத்திருப்பவைகளாகவும் இருந்தன. மேலும், இவைகள் எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள மனிதர்கள் ஒளிந்து கொள்வதற்கு உதவும் மறைவிடங்களாகவும் இருந்தன.[4] எனவே, வேதாகமத்தில் தேவன் கன்மலையாகச் சித்தரிக்கப்பட்டுள்ள வசனங்கள் கன்மலையின் இத்தகைய தன்மைகள் அவருக்கு இருப்பதை அறியத்தருகின்றன. அதாவது, தேவன் எவராலும் அசைக்கமுடியாத நிலையில் உறுதியானவராகவும், எக்காலத்திலும் அழிந்துபோகாமல் நித்தியமானவராகவும், மக்களுக்குப் பாதுகாப்பளிப்பவராகவும் இருக்கின்றார் என்பதை இவ்வசனங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

“நான் எப்பொழுதும் வந்தடையத்தக்க கன்மலையாயிரும்” என்று தாவீது 3ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளான். இதன் மூலம், எப்பொழுதும் எதிரியின் தாக்குதல்களிலிருந்து தன்னைப் பாதுகாக்கும் கன்மலையாக இருக்கும்படி அவன் தேவனிடம் கேட்டுள்ளான். யுத்தகாலங்களில் மனிதர்கள் பெரிய கற்பாறை அல்லது கன்மலையின் பின்னால் ஒளிந்துகொள்ளும்போது, எதிரிகளின் அம்புகளினால் அவர்களைத் தாக்க முடியாது. ஏனெனில் எறியப்படும் ஈட்டிகளினாலும் எய்யப்படும் அம்புகளினாலும் கன்மலைகளைத் தகர்த்துக்கொண்டு, மறுபக்கத்தில் இருக்கும் மனிதர்களிடம் செல்ல முடியாது. எனவே, எதிரிகள் தன்னைத் தாக்கும்போதெல்லாம், தான் பாதுகாப்பாக வந்து இருக்

---

[4] C.R.Swindoll & R.B.Zuck, *Understanding Christian Theology*, p. 193.

கக்கூடிய கன்மலையாக இருக்கும்படி தாவீது தேவனிடம் மன்றாடியுள்ளான். தாவீதைப்போல நாமும் தேவனுடைய பாது காப்பை நாடி வரும்போது, எவரும் எவ்விதத்திலும் தாக்கமுடி யாத விதத்தில் நம்மைப் பாதுகாப்பவராக அவர் இருக்கின்றார் என்பதைக் கிறிஸ்தவர்களாகிய நாம் ஒருபோதும் மறக்கலாகாது.[5]

கன்மலையாக இருக்கும் தேவன், எதிரிகளின் தாக்குதல்களில் இருந்து தன்னைப் பாதுகாப்பார் என்பதைத் தாவீது அறிந்திருந்த மையால் அவரைக் "கோட்டையாகவும்" இவ்வசனத்தில் வர் ணித்துள்ளான். அக்காலத்தில் நகரங்களுக்குப் பாதுகாப்பளிப்ப தற்காக அவற்றைச் சுற்றி கோட்டைகள் கட்டப்பட்டன. இவை பெரும்பாலும் நகரத்தில் இருக்கும் கன்மலைகளை அஸ்திவரா மாகக் கொண்டே கட்டப்படும். அதாவது, கன்மலைகளோடு தொடர்புபடுத்தப்பட்ட நிலையில் கோட்டைச் சுவர்கள் இருக்கும். இதனால் சங்கீதங்களில் கன்மலை என்பது கோட்டை என்னும் சொல்லுடன் சேர்ந்து வருவதைப் பல இடங்களில் நாம் காண லாம். தாவீதும், தேவன் தனக்கு கன்மலையாக மட்டுமல்ல கோட்டையாகவும் இருப்பதாக்க் குறிப்பிட்டுள்ளான் (சங்.18:2, 31:3). அக்காலத்தின் கோட்டைச் சுவர்கள் அதிக அகலமுடைய வைகளாக இருந்தன.[6] இதனால், எதிரிகளினால் அவற்றை தகர்த்து உள்ளே இருப்பவர்களைத் தாக்க முடியாதிருந்தது. இதைப் போலவே எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து நம்மைப் பாதுகாக்கும் உறுதியான கோட்டையாகத் தேவன் இருக்கின் றார்.

---

[5] இத்தகைய பாதுகாப்பைப்பற்றி 91ம் சங்கீதத்தில் விபரமாகக் குறிப்பி டப்பட்டுள்ளது. தேவன் நம்முடைய பிரயாணங்களின்போது நம்மைப் பாதுகாப்பதைப் பற்றி 121ம் சங்கீதம் அறியத்தருகின்றது. இச்சங்கீதத்தின் விளக்கத்திற்கு எனது "ஒத்தாசையாயிருக்கும் ஒப்பற்றதெய்வம்" என்னும் நூலைப் பார்க்கவும்.


[6] பாலஸ்தீனப் பகுதிகளில் 15 அடிகள் வரை அகலமான கோட்டைச் சுவர்களைப் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர் (L.Ryken, & J.C. Wilhoit ed. *Dictionary of Biblical Imagery*, p. 305).

தன்னைப் பாதுகாக்கும்படி மன்றாடிய தாவீது, தன்னுடைய எதிரிகள் யார் என்பதை 4ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளான்:

என் தேவனே,
துன்மார்க்கனுடைய கைக்கும்,
நியாயக்கேடும் கொடுமையுமுள்ளவனுடைய கைக்கும்
என்னைத் தப்புவியும் (சங்கீதம் 71:4).

இவ்வசனத்தின் முதல் வரியில் குறிப்பிடப்பட்டுள்ள "துன்மார்க்கரே" இரண்டாவது வரியில் "நியாயக்கேடும் கொடுமையுமுள்ளவராய்" விளக்கப்பட்டுள்ளனர். தாவீதை அழிக்க முற்பட்ட இவர்கள் யார் என்பதை அறியமுடியாதுள்ளது. எனினும், இவர்கள் தேவனை அறியாத தீயவர்களாக இருந்துள்ளனர் என்பதை இவர்களைக் குறிப்பிட தாவீது உபயோகித்துள்ள வார்த்தைகள் அறியத்தருகின்றன. வயோதிப காலத்தில் நமக்கு எதிரிகள் எவரும் இருக்கமாட்டார்கள் என்று எண்ணுவது தவறாகும். அக்காலத்தில் எதிரிகளின் தாக்குதல்களைச் சமாளிப்பதற்குப் போதிய சரீர பெலனும் மனத்தைரியமும் இல்லாமலிருப்பதனால், சாதாரண எதிர்ப்புகூட பெரியதொரு தாக்கமாகவே இருக்கும். மேலும், நாம் தேவனுக்குப் பயந்து வாழும்போது, துன்மார்க்கர் எப்பொழுதும் நமக்கு எதிராகச் செயற்படுகிறவர்களாகவே இருப்பார்கள். எனினும், தாவீதைப்போல தேவனை முழுமையாக நம்பி வாழும்போது, அவர் நம்முடைய கன்மலையும் கோட்டையுமாக இருந்து எவ்வித தீங்கும் நம்மை அணுகாதபடி நம்மைப் பாதுகாப்பார் (சங்.91).

## 2. தேவனுக்கு நன்றியுள்ளவனாக இருந்தான்



வயோதிபர்கள் பொதுவாகத் தங்களுடைய நிகழ்கால நிலைமையைக் குறித்து முறுமுறுக்கிறவர்களாகவே இருப்பார்கள். அவர்

கள் தங்களுடைய கடந்த கால வாழ்வைப் பற்றி சிந்திக்கும்பொழுது, முன்பு இருந்த பல உறவுகளும் இன்பங்களும் தற்பொழுது இல்லையே என்று கவலைப்படுகிறவர்களாகவும், தங்களுடைய சரீர பலவீனத்தின் வேதனையையும், தற்பொழுது வாழ்வில் இருக்கும் குறைவுகளையும் எண்ணிக் கலங்குகிறவர்களாகவுமே இருப்பார்கள். ஆனால் தாவீதோ வயோதிப காலத்தில் தன்னுடைய நிலைமையைக் குறித்து முறுமுறுக்கிறவனாக இருக்கவில்லை. அவன் தேவனுக்கு நன்றியுள்ளவனாக இருந்தான். இதுவரை காலமும் தேவன் தன்னுடைய வாழ்வில் செய்த நன்மைகளை நினைவுகூர்ந்து, அவைகளுக்காகத் தேவனைத் துதித்து மகிமைப்படுத்துபவனாக அவன் இருந்தான். உண்மையில், வாழ்வில் நெருக்கடியான சூழ்நிலைகளை எதிர் நோக்கும்போது, தேவன் இதுவரை காலமும் நம்மை எவ்வாறு வழிநடத்தி வந்தார் என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். அப்பொழுது, கடந்த காலத்தில் நம்மைக் கைவிடாமல் நம்மைப் பாதுகாத்து வழிநடத்திய தேவன், நிச்சயமாக நிகழ்காலத்தில் நாம் எதிர் நோக்கும் பிரச்சினையிலிருந்தும் நம்மை விடுவிப்பார் என்னும் நம்பிக்கை நமக்கு ஏற்படும். இத்தகைய நம்பிக்கையுடனிருந்த தாவீது, தேவனுக்கு நன்றி செலுத்துகிறவனாக இருந்தான்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கிறிஸ்தவர்கள் துன்ப துயரங்களைச் சந்திக்கும்போது, இவ்வளவு காலமாகத் தேவன் எவ்வாறு தங்களை வழிநடத்தி வந்துள்ளார் என்பதை மறந்துவிடுகின்றனர். இதனால் நிகழ்காலப் பிரச்சினைகளை அவர்கள் மேற்கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றனர். ஆனால், பிரச்சினைகள் வரும்போது, இதுவரை காலமும் தேவன் எவ்வாறு நம்மை வழிநடத்தி வந்துள்ளார்? கடந்தகாலங்களில் நாம் எதிர் நோக்கிய பிரச்சினைகளை மேற்கொள்ளத் தேவன் எவ்வாறு உதவி செய்தார்? என்பதை நினைத்துப் பார்க்கவேண்டும். அப்பொழுது, இதுவரை காலமும் நம்மை வழிநடத்திய தேவன் இப்பொழுது நாம் எதிர்நோக்கும் பிரச்சினையில் இருந்தும் நம்மை விடுவிப்பார்

என்னும் அசைக்கமுடியாத நம்பிக்கை ஏற்படும். இதனால்தான், தேவன் செய்த உபகாரங்கள் எதையும் மறக்க வேண்டாம் என்று 103ம் சங்கீதத்தில் தாவீது தன் ஆத்துமாவுக்கு அறிவுறுத்தல் கொடுத்துள்ளான் (சங்.103:1-2).

வயோதிபனாக இருந்த தாவீது, சிறு வயதிலிருந்து தேவன் எவ்வாறு தன்னை வழிநடத்தி வந்துள்ளார் என்பதை நினைவு கூர்ந்து அதற்காகத் தேவனுக்குத் தன்னுடைய நன்றிகளைச் செலுத்தினான். அவன் தன்னுடைய வாழ்க்கையைப் பின் நோக்கிப் பார்க்கும்போது, தன்னுடைய வாழ்வில் தேவனுடைய வழிநடத்துதல் அன்றாடம் இருந்துள்ளதை அறிந்துகொண்டான். உண்மையில், தாவீது சிறு வயதிலிருந்தே தேவனை நம்பி வாழ்ந்துள்ளான். 5ம் வசனம் இதை அறியத்தருகின்றது:

> கர்த்தராகிய ஆண்டவரே,
> நீரே என் நோக்கமும்
> என் சிறுவயது தொடங்கி
> என் நம்பிக்கையுமாயிருக்கிறீர் (சங்கீதம் 71:5).

இவ்வசனத்தில் “நோக்கம்” என்னும் சொல் மூலமொழியின்படி “எதிர்பார்ப்பு” என்றே இருக்க வேண்டும்.[7] ஆங்கில வேதாகமங்கள் இதை hope என்றே மொழிபெயர்த்துள்ளன. தன் வாழ்வில் சகல காரியங்களுக்கும் தாவீது தேவனையே எதிர்பார்த்து வாழ்ந்துள்ளான். தேவனும் அவனுடைய சகல தேவைகளையும் பூர்த்தி செய்து வந்துள்ளார். இதனால்தான், சிறு வயது முதல் தேவன் தன்னுடைய நம்பிக்கையாக இருப்பதாகத் தாவீது இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளான். 22ம் சங்கீதத்தில் அவன் இதைப்பற்றி எழுதும்போது, “நீரே என்னைக் கர்ப்பத்திலிருந்து

---

[7] புதிய தமிழ் வேதாகமத்தில் இச்சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது. திருவிவிலியத்திலும் பரிசுத்த பைபிளிலும் நம்பிக்கை என்னும் வார்த்தை உள்ளது. மோனஹன் மொழிபெயர்ப்பில் “ஆவலாய்க் காத்திருத்தல்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எடுத்தவர். என் தாயின் முலைப் பாலை நான் உண்கையில் என்னை உம்முடைய பேரில் நம்பிக்கையாயிருக்கப் பண்ணினீர். கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டபோதே உமது சார்பில் விழுந் தேன். நான் என் தாயின் வயிற்றில் இருந்தது முதல் நீர் என் தேவனாயிருக்கிறீர்" (சங்.22:9-10) என்று குறிப்பிட்டுள்ளான். மேலும், பிற்காலத்தில் தாவீது மந்தைகளை மேய்க்கும்போது ஒரு தடவை சிங்கத்திடமிருந்தும், இன்னுமொரு தடவை கரடியி டமிருந்தும் (1சாமு.17:34-37), அதன் பின்னர் கோலியாத்திடமிருந் தும், பல யுத்தங்களில் எதிரிகளிடமிருந்தும் தேவன் தன்னைப் பாதுகாத்ததை நினைவு கூர்ந்து இவ்வசனத்தை அவன் எழுதியி ருக்கலாம்.

சிறு வயதிலேயே தேவனை நம்பி வாழ்வதற்கு பழகியவர்களி னால், வயோதிப காலத்தில் தேவனை நம்புவது இலகுவான தாக இருக்கும். நீண்ட காலமாகத் தேவன் தங்களுடைய வாழ்வில் செய்த நன்மைகளை நினைவுகூரும்போது, நிகழ்கா லப் பிரச்சினை பெரிதாகத் தோன்றாது. இதனால் பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகள் சிறுவயதிலிருந்தே தேவனை நம்பி வாழும் விதத்தில் அவர்களை வளர்க்கவேண்டியது அவசியம். "பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து அவன் முதிர் வயதிலும் அதை விட்டுவிடாதிருப்பான்" என்று வேதாகமம கூறுகிறது (நீதி.22:6). பெற்றோர்களாகிய நாம் பிள்ளைகளுக்கு சிறுவயதில் எதைக் கற்றுக் கொடுக்கின்றோ மோ, அதுவே அவர்கள் கடைசிவரைக்கும் கைக்கொள்ளும் பழக்கமாக இருக்கும். எனவே, நாம் தேவனை நம்பி வாழ்வ தோடு, நம்முடைய பிள்ளைகளும் நம்மைப் போலவே தேவனை நம்பி வாழ்வதற்கு சிறு வயதிலிருந்தே அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

தாவீதை சிறு வயதிலிருந்து பாதுகாத்த தேவன், அவன் தாயின் வயிற்றிலிருக்கும் போதும், அவனுடைய பிறப்பின்போதும்

அவனைக் காப்பாற்றியுள்ளார். 6ம் வசனத்தில் தாவீது இதைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளான்:

நான் கர்ப்பத்தில் உற்பவித்தது முதல்
உம்மால் ஆதரிக்கப்பட்டேன்.
என் தாயின் வயிற்றிலிருந்து
என்னை எடுத்தவர் நீரே.
உம்மையே நான்
எப்பொழுதும் துதிப்பேன் (சங்கீதம் 71:6)

தாவீது தாயின் வயிற்றில் இருக்கும் காலத்தில் தேவனால் பாதுகாக்கப்பட்டுள்ளதையே "நான் தாயின் கர்ப்பத்தில் உற்பவித்தது முதல் உம்மால் ஆதரிக்கப்பட்டேன்" என்னும் வாக்கியம் அறியத்தருகின்றது. 139ம் சங்கீதத்தில், "என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர்" (சங்.139:13) என்று இதைத் தாவீது நேரடியாகவே குறிப்பிட்டுள்ளான். எத்தனையோ குழந்தைகள் தாயின் வயிற்றில் உருவாகி அழிந்து போகின்றன. ஆனால் நாம் தாயின் வயிற்றில் அழிந்துபோகாமல் தேவன் நம்மைக் காப்பாற்றியுள்ளார். உண்மையில், தேவன் நம்மைத் தாயின் வயிற்றில் காப்பாற்றியமையினாலேயே இன்று நாம் உயிருடன் இருக்கின்றோம் என்பதை நாம் ஒருபோதும் மறக்கலாகாது.

தாவீது தாயின் வயிற்றில் இருந்த காலத்தில் மட்டுமல்ல, அவனுடைய பிறப்பின் போதும் அவனோடிருந்து அவனைக் காப்பாற்றியுள்ளார். இவ்வசனத்தில் "என் தாயின் வயிற்றிலிருந்து என்னை எடுத்தவர் நீரே" என்னும் வாக்கியம் மூலமொழியில் பிரசவம் பார்க்கும் பெண்ணின் செயலைக் குறிப்பிடும் விதத்தில் உள்ளது.[8] அதாவது, பிரசவத்தின்போது மரிக்கும் தருவாயிலிருந்த தாவீது, தாயின் வயிற்றிலிருந்து பலவந்தமாக வெளியே

---

[8] D.M.Williams, *Psalms 1-72: The Preacher's Commentary*, p. 513; S. Terrien, *The Psalms: Strophic Structure and Theological Commen tary*, p. 512; J.Eaton, *Psalms: A Historical & Spiritual Commentary*, p. 259.

எடுக்கப்பட்டு, தொப்புள் கொடி வெட்டப்பட்டமையால் உயிர் பிழைத்துள்ளான். பிற்காலத்தில் இதைத் தாயின் மூலமாகக் கேள்விப்பட்ட தாவீது, தேவனே தன்னைத் தாயின் வயிற்றிலிருந்து வெளியே எடுத்து தன்னைக் காப்பாற்றியுள்ளார் என்னும் உண்மையை அறிந்து, அதற்காக எப்பொழுதும் தேவனைத் துதிப்பவனாக இருந்தான்.

தாவீது வயோதிபனாக இருந்த காலத்தில், தேவன் தன்னைத் தாயின் வயிற்றில் இருக்கும்போதும், பிறக்கும்போதும் காப்பாற்றியதை நினைவுகூர்வது நமக்கு அர்த்தமற்றதாகத் தென்படலாம். ஆனால், வயோதிபனாக இருந்த தாவீது எதிரிகளினால் கொலை செய்யப்படக்கூடிய நிலையில் இருந்தான் (சங்.71:10-11). இதனால், தன்னுடைய வாழ்வின் ஆரம்ப காலத்தில், அதாவது தாயின் கருவிலும் பிறப்பிலும் உயிராபத்திலிருந்து தேவன் தன்னைக் காப்பாற்றியதைப்பற்றி அவன் நினைவுகூர்ந்தபொழுது, தற்பொழுது வயோதிப காலத்தில் ஏற்பட்டுள்ள உயிராபத்திலிருந்தும் தேவன் தன்னைக் காப்பாற்றுவார் என்னும் நம்பிக்கை அவனுக்கு ஏற்பட்டது. உண்மையில், தேவன் கடந்த காலத்தில் செய்தவற்றை நினைவுகூரும்போது, தொடர்ந்தும் அவர் அதே விதமாகச் செயற்படுவார் என்னும் நம்பிக்கை ஏற்படும். எனவே, நெருக்கடியான சூழ்நிலைகளில், தேவன் கடந்த காலத்தில் நம்முடைய வாழ்வில் செய்த காரியங்களை நாம் நினைவுகூர வேண்டும்.

கடந்த காலத்தில் தேவன் தன்னைக் காப்பாற்றியதை நினைவுகூர்ந்தபோது, தேவன் இப்பொழுதும் தன்னைக் காப்பாற்றுவார் என்னும் நம்பிக்கை தாவீதுக்கு ஏற்பட்டது. இதனால் அவன் எப்பொழுதும் தேவனைத் துதிப்பவனாக இருந்தான். தாவீது இதைப்பற்றி 14ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளான்:

> நானோ எப்பொழுதும் நம்பிக்கை கொண்டிருந்து,
> மென்மேலும் உம்மைத் துதிப்பேன் (சங்.71:14)

இவ்வசனத்தில் "நம்பிக்கை கொண்டிருந்து" என்னும் சொற்பிரயோகம் மூலமொழியின்படி, "எதிர்பார்ப்புடன் நம்பிக்கையோடு காத்திருத்தலைக்" குறிக்கின்றது. சங்கீதங்களில் இச்சொல் பல தடவைகள் "காத்திருத்தல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (சங்.31:24, 33:18, 38:15, 42:6, 43:5, 130:5, 147:11). எனினும், எப்பொழுதும் நன்மையானதை எதிர்பார்த்துக் காத்திருத்தலைக் குறிப்பிடவே வேதாகமத்தில் இச்சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது.[9] எனவே, தேவன் நிச்சயமாகத் தன்னுடைய வாழ்வில் தலையிட்டுத் தன்னைக் காப்பாற்றுவார் என்னும் நம்பிக்கையில் தாவீது தேவனைத் துதித்துக்கொண்டிருந்தான். நெருக்கடியான சூழ்நிலைகளில் நாமும் இதேவிதமாகத் தேவன் நம்மை விடுவிப்பார் என்னும் நம்பிக்கையுடன் அவரைத் துதிப்பவர்களாக இருக்கவேண்டும். எனினும், தேவனைத் துதிப்பது நெருக்கடியான சூழ்நிலைகளில் மட்டும் செய்யப்படும் செயலாக அல்ல, அது நமது வாழ்வின் அன்றாட பழக்கமாக இருக்க வேண்டும். தாவீதின் வாழ்க்கை இவ்வாறு இருந்துள்ளதை 15ம் வசனம் அறியத்தருகின்றது:

என் வாய் நாள்தோறும்
உமது நீதியையும்,
உமது இரட்சிப்பையும் சொல்லும்.
அவைகளின் தொகையை நான் அறியேன்
(சங்கீதம் 71:15).

அனுதினமும் தேவனைத் துதிப்பதைத் தன் பழக்கமாகக் கொண்டிருந்த தாவீது, தேவனுடைய நீதியையும் இரட்சிப்பையும் நினைவுகூர்பவனாக இருந்தான். தேவன் எப்பொழுதும் நீதியாகச் செயற்படுகிறவர் என்பதை அறிந்திருந்த தாவீது, அவரைத் துதிக்கும்போது, அவருடைய நீதியான செயல்களைக் குறிப்பிடுகிறவனாக இருந்தான். தேவனைத் துதிக்கும்போது "ஆண்டவரே ஸ்தோத்திரம்" என்று மட்டும் சொல்லிக் கொண்டிராமல், நாம்

---
[9] A.A.Anderson, *Psalms: New Century Bible*, p. 515.

எதற்காகத் தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம் என்பதைக் குறிப்பிட்டு துதிக்க வேண்டும். அதாவது, தேவனுடைய தன்மை அவருடைய செயல்கள் என்பவற்றைச் சொல்லி நாம் அவரை ஸ்தோத்தரிக்க வேண்டும்.

தாவீதினுடைய சங்கீதங்களில் "இரட்சிப்பு" என்னும் வார்த்தை பெரும்பாலும் ஆபத்துகளிலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடுவதற்கே உபயோகிக்கப்பட்டுள்ளது. தேவன் தாவீதைப் பல தடவைகள் பயங்கரமான ஆபத்துகளிலிருந்து காப்பாற்றியுள்ளார். தாவீது தன்னுடைய தாயின் வயிற்றில் இருக்கும்போது அவன் அழிந்து போகாமல் பாதுகாத்த தேவன் (சங்.139:13), பிறப்பின்போதும் அவனைக் காப்பாற்றியுள்ளார் (சங்.71:6). அதன் பின்னர், அவன் மந்தைகளை மேய்க்கும் காலத்திலும், பல யுத்தங்களிலும், எதிரிகளின் தாக்குதல்களிலிருந்தும் பாதுகாக்கப்பட்டுள்ளான். உண்மையில் தேவன் தன்னை எத்தனை தடவை காப்பாற்றியுள்ளார் என்பதை வயோதிப காலத்தில் தாவீதினால் எண்ணிக் கணக்கிட முடியாதிருந்தது. இதனால் "அவைகளின் தொகையை நான் அறியேன்" என்று அவன் குறிப்பிட்டுள்ளான்.

தாவீதினுடைய வாழ்க்கையில் மட்டுமல்ல கிறிஸ்தவர்களாகிய நம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் நம்மால் எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்குத் தேவன் அற்புதங்களைச் செய்துள்ளார். தேவன் கடந்த காலங்களில் நம்முடைய வாழ்வில் செய்த காரியங்களை நினைத்துப் பார்க்கும்போது, நிகழ்காலப் பிரச்சினைகளைத் தேவன் தீர்ப்பார் என்னும் நம்பிக்கையுடன் அவற்றை சந்திக்கக்கூடிய தைரியம் ஏற்படுகின்றது. இத்தகைய தைரியத்துடன் வாழ்வதாகத் தாவீது 16ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளான்:

கர்த்தராகிய ஆண்டவருடைய
வல்லமையை முன்னிட்டு நடப்பேன்
உம்முடைய நீதியைப் பற்றியே
மேன்மை பாராட்டுவேன் (சங்கீதம் 71:16).

இவ்வசனத்தில், “ஆண்டவருடைய வல்லமையை முன்னிட்டு நடப்பேன்” என்னும் வாக்கியத்தை இரண்டுவிதமாக வேத ஆராய்ச்சியாளர்கள் விளக்கியுள்ளனர். சிலர் இதை, “ஆண்டவருடைய வல்லமையுடன் நடப்பேன்” என்னும் அர்த்தத்துடன் குறிப்பிட்டுள்ளனர்.[10] மற்றவர்கள் “ஆண்டவருடைய வல்லமையான செயல்களை அறிவிப்பேன்” என்று மொழிபெயர்த்துள்ளனர்.[11] எனினும், கடந்த காலத்தில் தேவன் தன்னுடைய வாழ்வில் செய்த காரியங்களை நினைவுகூர்ந்த தாவீது, நிகழ்காலத்தில் தான் எதிர்நோக்கியிருக்கும் நெருக்கடியிலிருந்தும் தேவன் தன்னை விடுவிப்பார் என்னும் நம்பிக்கையுடன் இருப்பதனால், ஆண்டவருடைய வல்லமையுடன் நடப்பேன் என்பதே இவ்வசனத்திற்குப் பொருத்தமான விளக்கமாக உள்ளது. உண்மையில், தேவனுடைய வல்லமையினால் எதிரிகளின் தாக்குதல்களை மேற்கொள்ள முடியும் என்னும் நம்பிக்கையுடையவனாக தாவீது இருந்துள்ளதையே இவ்வாக்கியம் அறியத்தருகின்றது. நெருக்கடியான சூழ்நிலைகளில், தேவன் கடந்த காலங்களில் நம்முடைய வாழ்வில் செய்த நன்மைகளை நினைவுகூர்ந்து அவற்றுக்காகத் தேவனுக்கு நன்றிசெலுத்தும்போது, நிகழ்கால பிரச்சினைகளையும் சவால்களையும் மேற்கொள்ளக்கூடிய வல்லமையைத் தேவன் நமக்கும் தருவார்.

தேவனுடைய வல்லமையுடன் வாழும் தாவீது அவருடைய நீதியைப்பற்றியே மேன்மை பாராட்டுவதாகவும் இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளான். தேவசெயல்கள் எப்பொழுதும் நீதியானவைகளாகவே இருப்பதனால், குற்றமற்ற தன்னை அழிக்க முற்படுகிறவர்களிடமிருந்து தேவன் தன்னைக் காப்பாற்றுவார் என்னும் நம்பிக்கையுடன் அவன் தேவனுடைய நீதியில் பெருமைப்படுகிறவனாக இருந்தான். மனிதர்கள் நமக்கு தீங்குசெய்தாலும் தேவன் ஒருபோதும் நமக்கு அநியாயம் செய்யமாட்டார்.

---

[10] ஆங்கிலத்தில் KJV மொழிபெயர்ப்பில் இவ்வாறு உள்ளது.
[11] ஆங்கிலத்தில் NIV மற்றும் NRSV மொழிபெயர்ப்புகளைப் பார்க்கவும்

மானிட வாழ்க்கைக்குத் தேவன் கொடுத்துள்ள சட்டதிட்டங்களைக் கைக்கொண்டு வாழ்ந்தால், நாம் மனிதருடைய எதிர்ப்புக்கும் சூழ்ச்சிக்கும் எவ்விதத்திலும் பயப்படத் தேவையில்லை. தேவன் நம்மைப் பாதுகாத்து வழிநடத்தவார்.

## 3. தேவனுடைய நற்செய்தியாளனாக இருந்தான்



தாவீது சிறு வயதிலிருந்தே தேவன் தன்னுடைய வாழ்வில் செய்த காரியங்களை மற்றவர்களுக்கு அறிவிக்கும் ஒரு நற்செய்தியாளனாக இருந்தான். இதனால், வயோதிப காலத்திலும் இப்பணியைத் தொடர்ந்து செய்வதற்காகத் தன்னைக் காப்பாற்றும்படி அவன் தேவனிடம் மன்றாடினான். தாவீது இச்சங்கீதத்தை எழுதும் காலம் வரை அவன் தேவனையும் அவருடைய செயல்களையும் மற்றவர்களுக்கு அறிவிப்பவனாகவே இருந்துள்ளான். அவன் இதைப் பற்றி 17ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளான்:

தேவனே, என் சிறுவயதுமுதல்
எனக்குப் போதித்து வந்தீர்
இதுவரைக்கும் உம்முடைய அதிசயங்களை
அறிவித்து வந்தேன் (சங்கீதம் 71:17).

தாவீது சிறுபிராயத்திலிருந்தே தேவனை நம்பி வாழ்ந்தமையால், அவன் தேவனிடமிருந்து பல காரியங்களைக் கற்றிருந்தான். தேவனுடைய பராமரிப்பு, பாதுகாப்பு என்பவற்றை அவன் தன் வாழ்வின் ஆரம்பத்திலிருந்தே அறிந்திருந்தான். இதனால் “என் சிறுவயதுமுதல் எனக்குப் போதித்து வந்தீர்” என்று இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளான். மேலும், தேவன் தன்னுடைய காலத்திலும், அதற்கு முற்பட்ட காலங்களிலும் செய்த அதிசயங்களையும் அவன் அறிந்திருந்தான். தாவீது இவற்றையெல்லாம் மற்றவர்களுக்கு அறிவிப்பவனாக இருந்தான். உண்மையில், வேதாகமத்

தின் மூலம் தேவன் எப்படிப்பட்டவர் என்பதையும், அவர் நம்மு டைய வாழ்வில் செய்தவற்றையும் மற்றவர்களுக்கு கூறவேண்டி யது நமது கடமையாக உள்ளது. தாவீதைப்போல நாமும் தேவனுடைய அதிசயங்களை மற்றவர்களுக்கு எப்பொழுதும் அறிவிப்பவர்களாக இருக்கவேண்டும்.

தான் சிறுவயதிலிருந்து செய்து வந்த காரியத்தை வயோதிப காலத்திலும் செய்வதற்குத் தன்னைப் பெலப்படுத்தும்படி தாவீது தேவனிடம் மன்றாடினான்:

இப்பொழுதும் தேவனே,
இந்தச் சந்ததிக்கு உமது வல்லமையையும்,
வரப்போகிற யாவருக்கும் உமது பராக்கிரமத்தையும்
நான் அறிவிக்குமளவும்
முதிர்வயதும் நரைமயிருமுள்ளவனாகும் வரைக்கும்
என்னைக் கைவிடீராக (சங்கீதம் 71:18).

இதுவரை காலமும் தேவனைப் பற்றி தன்னுடைய கால மக்க ளுக்கு அறிவித்து வந்த தாவீது, வயோதிப காலத்தில், அடுத்த தலைமுறைக்குத் தேவனைப்பற்றி அறிவிக்கவேண்டும் என்னும் எண்ணமுடையவனாக இருந்தான். இவ்வசனத்தில் “இந்த சந்ததி” என்பது யார் என்பதை அடுத்த வரியில் “வரப்போகிற யாவரும்” என்று தாவீது குறிப்பிட்டுள்ளான். இதிலிருந்து, தனது காலத்தில் வாலிபர்களாக இருக்கும் அடுத்த தலைமுறையினருக்குத் தேவ னைப்பற்றி அறிவிக்கவேண்டும் என்னும் எண்ணமுடையவனாக தாவீது இருந்துள்ளதை அறிந்துகொள்கின்றோம். இயற்கை விதிமுறையையும் மீறி தான் என்றென்றும் உயிரோடிருக்க வேண்டும் என்று தாவீது எண்ணவில்லை. மேலும், இவ்வுலக இன்பங்களை அனுபவித்து மகிழ்வதற்காக உயிருடனிருக்க வேண்டும் என்றும் அவன் கூறவில்லை. தனக்குப் பின்வரும் அடுத்த தலைமுறைக்குத் தேவனைப்பற்றி அறிவிக்கும் வரைக் கும் அவன் உயிரோடிருக்க விரும்பினான். தாவீதைப் போலவே


ஆசாப் என்னும் பக்தனும், தன்னுடைய பெற்றோரிடமிருந்து தேவனைப்பற்றி அறிந்து கொண்ட சத்தியங்களைத் தன்னுடைய பிள்ளைகளுக்கு அறிவிப்பவனாக இருந்தான். அவன் இதைப் பற்றி 78ம் சங்கீதத்தில் எழுதும்போது, "எங்கள் பிதாக்கள் அவைகளை எங்களுக்குத் தெரிவித்தார்கள். பின்வரும் சந்ததி யான பிள்ளைகளுக்கு நாங்கள் அவைகளை மறைக்காமல், கர்த்தரின் துதிகளையும் அவருடைய பலத்தையும் அவர் செய்த அவருடைய அதிசயங்களையும் விவரிப்போம்" (சங். 78:3-4) என்று குறிப்பிட்டுள்ளான்.

வயோதிப காலம் நமது இயலாமையை நினைத்து முறுமுறுக் கும் காலம் அல்ல. அது தேவனுடைய மகிமைக்காகவும், மற் றவருடைய நன்மைக்காகவும் உபயோகப்படுத்தப்படவேண்டிய பொன்னான காலமாகும். வயோதிப காலத்தில் நாம் அதுவரை காலமும் செய்து வந்த வேலையையும், சரீர பெலத்தையும் இழந்து போனாலும், அக்காலத்தில் நாம் செய்வதற்குத் தேவன் ஒரு பணியையும், அதைச் செய்வதற்கான பெலனையும் தருகின் றார். நாம் நம்முடைய பிள்ளைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக் கும் ஏனைய இளைஞர்களுக்கும் தம்மைப் பற்றி அறிவிக்கும் பணியைத் தேவன் கொடுக்கின்றார். இது வயோதிப காலத்தில் வாழ்க்கையைப் பயனும், அர்த்தமும், பெறுமதியும் உள்ளதாக மாற்றும் செயலாக உள்ளது. உண்மையில், தேவன் "யாக்கோ பிலே சாட்சியை ஏற்படுத்தி, இஸ்ரவேலிலே வேதத்தை ஸ்தா பித்து, அவைகளைத் தங்கள் பிள்ளைகளுக்கு அறிவிக்கும்படி நம்முடைய பிதாக்களுக்கு கட்டளையிட்டார். இனிப்பிறக்கும் பிள்ளைகளாகிய பின்சந்ததியார் அதை அறிந்து கொண்டு, அவர்கள் எழும்பித் தங்கள் பிள்ளைகளுக்கு அவைகளைச் சொல்லும்படிக்கும், தேவன்மேல் அவர்கள் தங்கள் நம்பிக் கையை வைத்து, தேவனுடைய செயல்களை மறவாமல், அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளும்படிக்கும், இருதயத்தைச் செவ் வைப்படுத்தாமலும், தேவனை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளாம

லும் இருந்த முரட்டாட்டமும் கலகமுமுள்ள சந்ததியாகிய தங்கள் பிதாக்களுக்கு அவர்கள் ஒப்பாகாதபடிக்கும் இவைகளைக் கட்டளையிட்டார்" (சங்.78:5-8) என்று குறிப்பிட்டுள்ளான்.

ஒரு தலைமுறை அடுத்த தலைமுறைக்குத் தேவனைப்பற்றி அறிவிக்காவிட்டால், தேவனைப்பற்றிய சத்தியம் அத்தலைமுறையோடு இல்லாமல் போய்விடும். ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவ நாடுகளாக இருந்த பல நாடுகளில் இன்று கிறிஸ்தவர்கள் இல்லாமலிருப்பதற்கு, அல்லது பெயர்க்கிறிஸ்தவர்கள் அதிகமாக இருப்பதற்கு, குறிப்பிட்ட ஒரு தலைமுறையினர் தங்களுடைய அடுத்த தலைமுறைக்கு இயேசுகிறிஸ்துவைப்பற்றி அறிவிக்காமல் இருந்ததே காரணமாகும். கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு தலைமுறையிலும் தங்களுடைய அடுத்த தலைமுறையினருக்கு இயேசுகிறிஸ்துவைப்பற்றி அறிவிக்கவேண்டியது அவசியம். இல்லையென்றால் நாம் வாழும் பிரதேசத்தில் அடுத்த தலைமுறையினர் கிறிஸ்தவர்களாக இருக்கமாட்டார்கள். எனவே, நாம் நம்முடைய பிள்ளைகளுக்கு சிறு பிராயத்திலிருந்தே இயேசு கிறிஸ்துவைப்பற்றி போதிக்க வேண்டும். ஏனைய பாடங்களை அவர்களுக்கு கற்பிக்க நாம் எவ்வளவு ஆர்வம் காண்பிக்கின்றோமோ, அதைவிட அதிக ஆர்வத்துடன் நம்முடைய பிள்ளைகளுக்கு கிறிஸ்தவ உபதேசங்களைச் சிறுவயதிலிருந்தே நாம் கற்பிக்க வேண்டும். அப்பொழுது மட்டுமே அடுத்த தலைமுறை கிறிஸ்தவ பண்பும் ஒழுக்கமும் நிறைந்த சமுதாயமாக இருக்கும். நாம் அடுத்த தலைமுறையினருக்கு சொத்துக்களைச் சேர்த்து வைக்காவிட்டாலும்கூட பரவாயில்லை. தேவனுடைய வார்த்தையை நாம் அவர்களுக்கு கற்பிக்காமல் இருந்துவிடக்கூடாது. இது ஓய்வுநாள் பாடசாலையின் பொறுப்பு என்று எண்ணுவது தவறாகும். பிள்ளைகளுக்குத் தேவனுடைய வார்த்தையைக் கற்பிக்கவேண்டியது பெற்றோருடைய கடமையாகவே உள்ளது. உண்மையில், தம்மைப்பற்றி அடுத்த தலைமுறைக்கு அறிவிப்பதற்காகவே தேவன் நமக்கு வயோதிப காலத்தைத் தந்துள்ளார்.

கிறிஸ்தவர்களாகிய நாம் தாவீதைப்போல வயோதிப காலத்தில் தேவனை முழுமையாக நம்புகிறவர்களாகவும், பிறப்பிலிருந்து இன்றுவரை தேவன் நம்முடைய வாழ்வில் செய்து வந்துள்ள நன்மைகளுக்காக அவருக்கு நன்றி செலுத்துகிறவர்களாகவும், அவர் நம்முடைய வாழ்வில் செய்தவற்றையும், வேதாகமம் அவரைப் பற்றி அறியத்தரும் சத்தியங்களையும் மற்றவர்களுக்கு, குறிப்பாக அடுத்த தலைமுறையினருக்கு அறிவிப்பவர்களாகவும் இருக்கவேண்டும். அப்பொழுது வயோதிப காலம் மகிழ்ச்சியும் மனநிறைவும் உள்ளதாக இருக்கும்.



# மூன்றாம் அத்தியாயம்



## சங்கீதம் 71:20-24

# வயோதிப காலத்தின் நிச்சயம்

வயோதிப காலத்தில் சரீர பெலவீனத்துடன் தனிமையாக இருந்த தாவீது எதிரிகளின் தாக்குதல்களுக்கு உட்பட்ட சந்தர்ப் பத்தில், தேவன் தன்னை பெலப்படுத்தி, தனக்கு உதவி செய் வார் என்னும் நம்பிக்கையுடன் அவரை நோக்கி மன்றாடுகிறவ னாக இருந்தான். இதனால் அவன் வயோதிப காலத்தில் ஏறெடுத்த ஜெபமாக உள்ள 71ம் சங்கீதம், தேவன் எப்படியும் தன்னை அழிக்க முற்படும் எதிரிகளிடமிருந்து பாதுகாப்பார் என்னும் நிச்சயத்துடன் நிறைவு பெறுகின்றது. தாவீது வயோதிப னாகவும் சரீரம் பெலவீனமடைந்து தள்ளாடுகிற நிலையில் இருந்தாலும், தேவன்மீது அவன் வைத்திருந்த விசுவாசம் எவரா லும் அசைக்கமுடியாத அளவுக்கு உறுதியாக இருந்தது. உண்

மையில், நாம் ஜெபிக்கும்போது தேவன் நமது ஜெபத்திற்குப் பதில் கொடுப்பார் என்னும் நிச்சயம் நமக்கு இருக்க வேண்டியது அவசியம். இயேசுகிறிஸ்து இதைப்பற்றி கூறும்போது, "நீங்கள் ஜெபம்பண்ணும்போது, எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்" (மாற்.11:24) என்று தெரிவித்துள்ளார்.

தாவீதின் ஜெபமானது, அவனுடைய விண்ணப்பத்திற்குச் செவிகொடுக்கும் தேவன் என்ன செய்வார் என்பதைப்பற்றியும் (சங்.71:20-21), அதற்குப் பதிலாகத் தாவீது என்ன செய்வான் என்பதைப்பற்றியும் (சங்.71:22-24) அறியத்தருகின்றது. தாவீதைப் போலவே, ஜெபிப்பதற்கும் முன்பே தேவன் தங்களுடைய ஜெபங்களுக்குப் பதில் கொடுத்து விட்டார் என்னும் நம்பிக்கையுடையவர்களாகவே பெரும்பாலான பக்தர்கள் இருந்துள்ளனர். உதாரணத்திற்கு, மழைக்காக ஜெபிக்கத் தொடங்குவதற்கும் முன்பே, தீர்க்கதரிசியாகிய எலியா, "பெருமழையின் இரைச்சல் கேட்கப்படுகிறது" என்று கூறினான் (1ராஜா.18:42). இதேவிதமாக, இங்கிலாந்திலுள்ள பிரிஸ்டல் என்னுமிடத்தில் சிறுவர்களைப் பராமரித்து வந்த "ஜோர்ஜ் முல்லர்" என்பவர் ஒரு தடவை, காலையில் பிள்ளைகளுக்கு உணவும் பாலும் இல்லாமலிருந்த போது, பிள்ளைகள் அனைவரையும் உணவுக்காகத் தேவனுக்கு நன்றி செலுத்தும்படி கூறி, "ஆண்டவரே இன்று நீர் தரப்போகிற உணவுக்காகவும் பாலுக்காகவும் ஸ்தோத்திரம்" என்று ஜெபித்தார். சற்று நேரத்தில் அனைவரும் ஆச்சரியப்படும் விதத்தில் அன்றைய தினம் காலை உணவும் பாலும் அவர்களுக்கு கிடைத்தது.[1] தாவீதும் இதேவிதமாக, தேவன் தன்னுடைய ஜெபத்திற்கு நிச்சயமாக பதில் கொடுப்பார் என்று நம்பிக்கையுடன் தன்னுடைய மன்றாடலை நிறைவு செய்துள்ளான்.

---

[1] G.Hanks, *70 Great Christians Changing the World*, pp. 228-232.

கடந்த காலத்தில் பல தடவைகள் பல்வேறு விதமான ஆபத்துக ளில் இருந்தும் தன்னைக் காப்பாற்றிய தேவன், தன்னுடைய வயோதிப காலத்திலும் தன்னைக் காப்பாற்றுவார் என்னும் நம்பிக்கையுடன் தாவீது 20ம் வசனத்தை எழுதியுள்ளான்:

அநேக இக்கட்டுகளையும் ஆபத்துகளையும்
காணும்படி செய்த என்னை
நீர் திரும்பவும் உயிர்ப்பித்து, திரும்பவும் என்னைப்
பூமியின் பாதாளங்களிலிருந்து ஏறப்பண்ணுவீர்
(சங்கீதம் 71:20).

தாவீதை அவனுடைய எதிரிகள் கொலை செய்ய முற்பட்டிருந்த மையால், அவன் மரிக்கக்கூடிய நிலையில் இருந்தான். இதனால் அவன், "என்னைப் பூமியின் பாதாளங்களிலிருந்து ஏறப்பண்ணு வீர்" என்று குறிப்பிட்டுள்ளான். பாதாளம் என்பதற்கு மூலமொழி யில் உபயோகிக்கப்பட்டுள்ள "ஷியொல்" என்னும் எபிரேயப் பதம் அக்காலத்தில் மரித்தவர்களின் சரீரம் வைக்கப்படும் கல்லறையை அல்லது புதைகுழியைக் குறிப்பிடவே உபயோ கிக்கப்பட்டது.[2] இதனால், மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்ததைப்

---

[2] வேதாகமத்தில் "பாதாளம்" என்னும் சொல் நரகத்தைக் குறிப்பதாகக் கருதுவது தவறாகும். பழைய ஏற்பாட்டில் பாதாளம் மரித்தவர்களின் சரீரம் வைக்கப்படும் கல்லறையைக் குறிப்பிடும் சொல்லாகவே உள்ளது. இதனால்தான் மரித்த துன்மார்க்கர் மட்டுமல்ல நீதிமான்களும் பாதாளத் திற்குச் செல்வதாகப் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது (ஆதி. 37:35, 42:38, எண்.16:30, யோபு.17:13-16, 21:13, 24:19-20, சங்.31:17, ஏசா.38:10). மேலும், தமிழில் வேதாகமத்தை மொழிபெயர்த்தவர்கள், பழைய ஏற்பாட்டில் மரித்தவர்களின் சரீரங்கள் வைக்கப்படும் கல்லறை யைக் குறிப்பிடும் "ஷியொல்" என்னும் எபிரேயச் சொல்லை மட்டுமல்ல, புதிய ஏற்பாட்டில் மரித்த துன்மார்க்கரின் ஆத்துமா செல்லும் இடமான "ஹேதீஸ்" என்பதையும் பாதாளம் என்றே குறிப்பிட்டுள்ளனர் (லூக்.16:23, வெளி.20:14). பாதாளம் என்பதை நரகம் என்னும் அர்த்தத்துடன் பலர் விளக்குவதற்கு இதுவே காரணமாகும். புதிய ஏற்பாட்டில் நரகம் என்ப தைக் குறிப்பிட "கெஹேனா" என்னும் கிரேக்கச் சொல் உபயோகிக்கப் பட்டுள்ளது (மாற்.9:43, 9:45, 9:47).

பற்றியே தாவீது இவ்வாறு குறிப்பிட்டுள்ளதாக சிலர் கருதுகின்றனர். புதிய ஏற்பாட்டில் இச்சொற்பிரயோகம் மரணத்திலிருந்து உயிர்த்தெழுதல் என்னும் அர்த்தத்தைப் பெற்றாலும், சங்கீதங்களில் மரிக்கக்கூடிய நிலையிலிருந்து காப்பாற்றப்படுவதே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது (சங்.30:1, 30:3, 40:2, 69:1-2, 69: 14-15).[3] உண்மையில், எதிரிகளின் தாக்குதல்களினால் மரிக்கக்கூடிய நிலையில் இருந்த தன்னைத் தேவன் காப்பாற்றுவதைப் பற்றியே தாவீது இவ்வசனத்தில் எழுதியுள்ளான்.[4]

எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு அதிகமான தடவைகள் ஆபத்துகளிலிருந்து தேவன் தன்னைக் காப்பாற்றியதாகப் 15ம் வசனத்தில் தெரிவித்த தாவீது, தன் வாழ்வில் "அநேக இக்கட்டுகளையும் ஆபத்துகளையும் காணும்படி செய்த தேவன்" நிச்சயமாகத் தன்னை மறுபடியுமாகக் காப்பாற்றுவார் என்னும் நம்பிக்கையுடன் இருந்துள்ளதை இவ்வசனம் அறியத்தருகின்றது. நமது வாழ்வில் வரும் நெருக்கடியான சூழ்நிலைகள், நாம் தேவனால் கைவிடப்பட்டுள்ளதற்கான அடையாளங்கள் அல்ல. அவை நாம் தேவனிடம் முழுமையாகத் தஞ்சம் புகுவதற்கான அரிய சந்தர்ப்பங்களாக உள்ளன. இத்தகைய சூழ்நிலைகளைத் தேவனே அனுமதித்திருந்தாலும், இவை அவரைவிட்டு நம்மைத் தூரமாக அல்ல, நம்மை அவரண்டை கொண்டுவரவேண்டும். இதற்குத் தாவீதைப்போல நாமும் எப்பொழுதும் தேவனை நம்பி வாழ்பவர்களாக இருக்கவேண்டும்.

எதிரிகளிடமிருந்து தன்னைத் தேவன் காப்பாற்றுவது மட்டுமல்ல, தன்னைக் கனப்படுத்தித் தேற்றுவார் என்றும் தாவீது அடுத்த வசனத்தில் குறிப்பிட்டுள்ளான்:

என் மேன்மையைப் பெருகப் பண்ணி
என்னை மறுபடியும் தேற்றுவீர் (சங்கீதம் 71:21).

---

[3] C.C.Broyles, *Psalms: New International Biblical Commentary*, p. 293.
[4] G.H.Wilson, *Psalms Vol 1: NIV Application Commentary*, pp. 973-974.

இவ்வசனத்தில் "மேன்மை" என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட் டுள்ள சொல் மூலமொழியில் "கனம்" என்னும் அர்த்தமுடை யது.[5] உண்மையில், தாவீதைக் கொல்ல முற்படும் எதிரிகளிடமி ருந்து அவனைக் காப்பாற்றுவது, அவனைக் கனப்படுத்தும் செயலாகவே இருக்கும். ஆரம்பத்தில், "வெட்கம் அடையாதபடி செய்யும்" என்று மன்றாடிய தாவீது (சங்.71:1), இப்பொழுது, தேவன் தன்னைக் கனப்படுத்துவார் என்னும் நம்பிக்கையுடன் இருக்கின்றான். உண்மையில், தம்மை நம்புகிறவர்களைக் கனப்ப டுத்துகிறவராகத் தேவன் இருக்கின்றார். மனிதர்கள் நமக்கு எதிராகச் செயற்பட்டு, நம்மை இழிவுபடுத்தினாலும், தேவன் நம்மை நிச்சயம் கனப்படுத்துவார் என்பதை நாம் ஒருபோதும் மறக்கலாகாது. ஏனெனில், "இக்காலத்துப் பாடுகள் இனி நம்மி டத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல" (ரோ.8:18) என்று வேதம் கூறுகிறது.

தேவன் தன்னைக் கனப்படுத்துவது மட்டுமல்ல, தன்னைத் தேற்றுகிறவராக இருப்பதாகவும் தாவீது இவ்வசனத்தில் குறிப் பிட்டுள்ளான். வாழ்வில் பல தடவைகள் தாவீது இதை அனுபவ ரீதியாகக் கண்டிருந்தான். உண்மையில் வாழ்க்கையில் நெருக்க டிகளும் பிரச்சினைகளும் வரும்போது, நம்மை ஆற்றித் தேற்றுவ தற்கு எவருமே இருக்கமாட்டார்கள். மேலும், மனிதருடைய ஆறுதல் வார்த்தைகள் நமக்கு உண்மையான மன ஆறுதலை யும் நிம்மதியையும் தராது. பக்தன் யோபினுடைய வாழ்க்கை இதற்குச் சிறந்த உதாரணமாயுள்ளது. துயர காலத்தில் அவ னுக்கு ஆறுதல் சொல்ல வந்த அவனுடைய நண்பர்கள் ஏழு நாட்களுக்குப் பின் அவனோடு பேசத் தொடங்கினாலும் (யோபு. 2:11-13), அவர்களுடைய வார்த்தைகள் அவனுக்கு ஆறுதல் அளிக்கவில்லை. இதேவிதமாகத்தான், மனிதர்களுடைய வார்த் தைகள் நமக்கு உண்மையான ஆறுதலைத் தருவதில்லை. ஆனால், நாம் தேவனை நம்பி வாழும்போது, அவருடைய

[5] M.E.Tate, *Psalms 51-100: Word Biblical Commentary Vol. 20*, p. 210.

வார்த்தைகள், அதாவது, வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ள அவருடைய வார்த்தைகள் நமக்கு உண்மையான ஆறுதலையும் மனச்சமாதானத்தையும் தருகின்றன. இதை அனுபவரீதியாக அறிந்திருந்த பக்தன் 119ம் சங்கீதத்தில், “உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால் என் துக்கத்திலே அழிந்து போயிருப்பேன்” என்று தெரிவித்துள்ளான் (சங்.119:92). எனவே, துயர காலங்களில் நாம் தேவனுடைய வார்த்தையையே அதிகமாக வாசித்து தியானிக்க வேண்டும். ஏனெனில், “நமக்கு வருகிற சகல உபத்திரவங்களிலும் அவரே நமக்கு ஆறுதல் செய்கிறவர்” (2.கொரி.1:4).

தேவன் தன்னைக் கனப்படுத்தி தேற்றுவதனால், வாத்தியக் கருவிகளின் உதவியுடன் தேவனைத் துதிப்பதாகத் தாவீது கூறுகின்றான்.

என் தேவனே,
நான் வீணையைக் கொண்டு உம்மையும்
உம்முடைய சத்தியத்தையும் துதிப்பேன்.
இஸ்ரவேலின் பரிசுத்தரே,
சுரமண்டலத்தைக் கொண்டு
உம்மைப் பாடுவேன் (சங்கீதம் 71:22).

இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு வாத்தியக் கருவிகளையும் ஒரே நேரத்தில் ஒருவரால் உபயோகிக்க முடியாது என்பதனால், ஆலயத்தில் நடைபெறும் பகிரங்க வழிபாட்டில் பாடல்களைப் பாடி தேவனை மகிமைப்படுத்துவதைப் பற்றியே தாவீது இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளதாக வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.[6] தாவீது இங்கு குறிப்பிடும் வீணையும் சுரமண்டலமும், ஏனைய சங்கீதங்களில் ஒன்றாக இடம்பெறும் வசனங்கள் பகிரங்க வழிபாட்டைப்பற்றிய பகுதிகளாக உள்ளன (33:2, 57:8-9, 81:2, 92:3, 108:2-3, 150:3). தேவனை நம்முடைய

---

[6] C.C.Broyles, *Psalms: New International Biblical Commentary*, p. 293.

தனிப்பட்ட வழிபாட்டில் மட்டுமல்ல, பகிரங்க வழிபாட்டிலும் ஆராதித்து மகிமைப்படுத்த வேண்டும். தற்காலத்தில் சிலர் தங்களுக்கு வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் மூலம் தேவனுடைய செய்தியைக் கேட்கக்கூடியதாக இருப்பதனால், ஆலயத்திற்குச் செல்லவேண்டியதில்லை என்னும் எண்ணமுடை யவர்களாக இருக்கின்றனர். ஆனால் இது தவறான ஒரு முடி வாகும். கிறிஸ்தவர்கள் ஒருவரோடொருவர் ஐக்கியமுள்ளவர்க ளாக இருக்கவேண்டும் என்பதனால் (1யோவா.1:3,7), "சபைகூடி வருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல, நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்" (எபி.10:25) என்றே வேதாகமம் கூறுகிறது. எனவே, நாம் எவ்விடத்தில் வாழ்கின் றோமோ, அவ்விடத்திற்கு அருகில் இருக்கும் ஒரு கிறிஸ்தவ சபையில் அங்கத்தினராகி, அங்கு நடைபெறும் வழிபாட்டில் நாம் தேவனை ஆராதிப்பதை நம்முடைய வாழ்வின் ஒரு பழக்கமாகக் கொண்டிருக்கவேண்டும்.

22ம் வசனத்தில் இடம்பெறும் "இஸ்ரவேலின் பரிசுத்தர்" என்னும் பெயர் சங்கீதங்களில் இவ்வசனத்திலும் 78:41, 89:18லும் மட்டுமே உள்ளது. ஆனால் ஏசாயாவில் ஏறக்குறைய 25 தடவைகள் இடம்பெறும் இப்பெயர், பழைய ஏற்பாட்டில் இன்னும் மூன்று இடங்களிலும் உள்ளது (2ராஜா.19:22, எரே.50:29, 51:5). ஏசாயா வின் புத்தகத்தில் முதல் 39 அதிகாரங்களிலும் தேவனுடைய நியாயத்தீர்ப்புச் செயலுடன் தொடர்புள்ள விதத்தில் இஸ்ரவே லின் பரிசுத்தர் என்னும் பெயர் உபயோகிக்கப்பட்டுள்ளது. ஆனால், 40ம் அதிகாரத்திற்குப் பின்னர், தேவனை மீட்பராகச் சித்தரிக்கும் வசனங்களிலேயே இப்பெயர் இடம்பெற்றுள்ளது. 71ம் சங்கீதத்தில் இஸ்ரவேலின் பரிசுத்தர் என்னும் பெயர் தாவீதினுடைய எதிரிகள் நியாயந்தீர்க்கப்பட்டு அவன் மீட்கப்படு வதை அறியத்தருகின்றது. இதற்காகத் தேவனைத் துதிக்கும் தாவீது சந்தோஷத்துடன் பாடல்களைப் பாடி தேவனை மகிமைப் படுத்துகிறவனாக இருந்தான்:

நான் பாடும்போது
என் உதடுகளும்,
நீர் மீட்டுக்கொண்ட என் ஆத்துமாவும்
கெம்பீரித்து மகிழும் (சங்கீதம் 71:23).

தாவீதின் பாடல் வெறும் உதட்டளவு உச்சரிப்பாக மட்டும் இருக்கவில்லை. தன்னுடைய உதடுகள் மட்டுமல்ல, தன் ஆத்துமாவும் சந்தோஷப்படுவதாக தாவீது இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளான். "ஆத்துமா" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள "நெ.ஃ.பெஸ்" (*nephesh*) என்னும் எபிரேயச் சொல் "உயிர்" "ஜீவன்" "மனிதன்" "இதயம்" "சிந்தை" என்னும் பல அர்த்தங்களைக் கொண்டுள்ளது.[7] இவ்வசனத்தில் இச்சொல்

---

[7] பழைய ஏற்பாட்டில் 755 தடவைகள் இடம்பெறும் "நெ.ஃ.பெஸ்" என்னும் சொல் பல்வேறு அர்த்தங்களைக் கொண்டுள்ளது. இதனால், வேதாகமத்தில் பொதுவாக இச்சொல் மனிதனுடைய உயிரையும், இதயத்தையும், முழு மனிதனையும் குறிப்பிட உபயோகிக்கப்பட்டுள்ளது. ஆதியாகமம் 12:13, யாத்திராகமம் 4:19, 2சாமுவேல் 1:9, நீதிமொழிகள் 1:18, எரேமியா 34:20, ஆமோஸ் 2:14 போன்ற வசனங்களில் இச்சொல் மனிதனுடைய உயிரைக் குறிப்பிடும் விதத்தில் "உயிர்" "பிராணன்" "ஜீவன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது சங்கீதங்களை எழுதியவர்கள் எதிரிகளிடமிருந்து தம்மை, குறிப்பாகத் தம்முடைய உயிரைக் காப்பாற்றும்படி மன்றாடும்போது "ஆத்துமாவைக் காப்பாற்றும்படி" ஜெபித்துள்ளதை சங்கீதம் 6:4, 17:13, 22:20 போன்ற வசனங்களில் நாம் காணலாம். மனிதனுடைய உணர்வுகளின் இருப்பிடமான இதயத்தைக் குறிப்பிட இச்சொல் ஆதியாகமம் 34:3, யாத்திராகமம் 23:9, 1சாமுவேல் 18:1-3, சங்கீதம் 6:3 போன்ற வசனங்களில் உபயோகிக்கப்பட்டுள்ளது. மேலும், இச்சொல் ஆதியாகமம் 12:5, யாத்திராகமம் 12:15, யோசுவா 10:28 எசேக்கியேல் 13:18-19 போன்ற வசனங்களில் மனிதரைக் குறிக்கின்றது. சங்கீதம் 69:1ல் இச்சொல் கழுத்தைக் குறிக்கின்றது. லேவியராகமம் 24:18, உபாகமம் 12:23 போன்ற வசனங்களில் மிருகங்களின் உயிரையும், ஆதியாகமம் 2:19, 9:10-11, லேவியராகமம் 11:46 என்னும் வசனங்களில் மிருக ஜீவன்களையும் குறிப்பிட இச்சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது. மேலும் எண்ணாகமம் 5:2, 6:6, 9:6-7, ஆகாய் 2:13 போன்ற வசனங்களில் இச்சொல் பிரேதத்தைக் குறிக்கின்றது. இதேவிதமாகப் புதிய ஏற்பாட்டில் "சைக்கி" (*psyche*) என்னும் கிரேக்கச் சொல்லும் இவ்வாறு பல்வேறு அர்த்தங்களைக் கொண்ட சொல்லாகவே உள்ளது.

மனிதனின் ஒரு பகுதியை அல்ல, முழு மனிதனையும் குறிக்கும் விதத்திலேயே உபயோகிக்கப்பட்டுள்ளது.[8] அதாவது, தன் உதடுகள் மட்டுமல்ல தன்னுடைய முழு சரீரமும் முழு உள்ளமும் சந்தோஷப்படுவதாகத் தாவீது குறிப்பிட்டுள்ளான். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கிறிஸ்தவர்களின் ஆராதனைகள் வெறும் உதட்டளவு உச்சரிப்பாக மட்டுமே உள்ளன. உதட்டுக்கும் உள்ளத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லாத நிலையிலேயே பாடல்கள் பாடப்படுகின்றன. இவ்வாறு தேவனை ஆராதிப்பதில் எவ்வித அர்த்தமுமில்லை. தாவீதைப்போல நாமும் முழுமையான ஈடுபாட்டுடன் தேவனை மகிமைப்படுத்திப் பாடுகிறவர்களாகவும் ஜெபிக்கிறவர்களாகவும் இருக்கவேண்டும். நம்முடைய உதடு மட்டுமல்ல, முழு சரீரமும் உள்ளமும் தேவனை ஆராதிப்பதில் முழுமையாக ஈடுபட வேண்டும். இதனால், புதிய ஏற்பாட்டில் "சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுங்கள்" (ரோ.12:1) என்றும், "சரீரத்தினாலும் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்" (1கொரி.6:20) என்றும், "தேவனாகிய கர்த்தரிடத்தில் முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் முழு மனதோடும், முழு பலத்தோடும் அன்புகூருங்கள்" (மாற்.12:29-30)[9] என்றும் நாம் அறிவுறுத்தப்பட்டுள்ளோம்.

தேவன் தன்னுடைய எதிரிகளைத் தோற்கடிப்பது தாவீதுக்கு சந்தோஷத்தை ஏற்படுத்தினாலும், இதற்காக அவன் தன்னில்

---

[8] A.A.Anderson, *Psalms Volume 1: New Century Bible*, p. 518.

[9] பழைய ஏற்பாட்டில் இதற்கு இணையான வசனம், "நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும் அன்புகூருவாயாக" என்று உள்ளது (உபா.6:5). இவ்வசனத்தில் "இதயம்" மனிதனுடைய அறிவு சார்ந்த சிந்தையையும், "ஆத்துமா" மனிதனுடைய ஆவிக்குரிய பகுதியையும், "பலம்" சரீரத்தையும் குறிக்கின்றது (H.W.Wolff, *Anthropology of the Old Testament*, pp. 46-51). எனினும் இது மனிதனை மூன்று பகுதிகளாகப் பிரிப்பதற்கான ஆதாரம் அல்ல. தேவனை நேசிப்பதில் மனிதன் தன்னை முழுமையாக ஈடுபடுத்த வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு சொல்லப்பட்டுள்ளது (J.A.Brooks, *Mark: New American Commentary*, p. 197).

பெருமைப்படுகிறவனாக இருக்கவில்லை. தேவன் நம்மீது கிருபைகூர்ந்து நமக்காகச் செய்யும் காரியங்கள் நம்மை மேன் மைப்படுத்துவதற்கானவைகள் அல்ல. அவை தேவனுக்கு கனத் தையும் மகிமையையும் செலுத்துவதற்கு நமக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் செயல்களாகும். இதனால், தேவன் தன்னைக் காப்பாற்றியதற்கு அவருடைய நீதியே காரணம் என்பதைத் தாவீது 24ம் வசனத்தில் சுட்டிக்காட்டியுள்ளான்.

எனக்குப் பொல்லாப்பைத் தேடுகிறவர்கள்
வெட்கி இலச்சையடைந்தபடியால்
நாள்தோறும் என் நாவு உம்முடைய
நீதியைக் கொண்டாடும் (சங்கீதம் 71:24).

71ம் சங்கீதத்தில் தாவீது பலதடவைகள் தேவனுடைய நீதியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளான். தேவன் நீதியுள்ளவராக இருப்பதினா லேயே தன்னை அவர் விடுவித்துள்ளார் என்பதை அவன் அறிந்திருந்தான். இவ்வசனத்தில் "நீதியைக் கொண்டாடும்" என்பது மூலமொழியின்படி "நீதியை அறிவிப்பேன்" என்று மொழிபெயர்க்கப்படவேண்டும். இதனால், திருவிவிலியத்தில் இச்சொற்பிரயோகம், "நீதியை எடுத்துரைக்கும்" என்றும், புதிய தமிழ் வேதாகமத்தில் "நேர்மையான செயல்களைப்பற்றிச் சொல்லும்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவீது வயோதிப காலத்தில் தேவனை மகிமைப்படுத்துபவனாகவும், அவரை மற்றவர்களுக்கு அறிவிப்பவனாகவும் இருந்தான். இச்சங்கீதத்தின் 8ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தாவீதின் ஜெபமும் இதையே சுட்டிக்காட்டுகிறது:

என் வாய் உமது துதியினாலும்,
நாள்தோறும் உமது மகத்துவத்தினாலும்
நிறைந்திருப்பதாக (சங்கீதம் 71:8).

வயோதிப காலம், செய்வதற்கு எதுவும் இல்லாத அலுப்பும் சோர்வும் நிறைந்துள்ள காலம் அல்ல. அது நம்முடைய

வாழ்வில் தேவன் செய்த காரியங்களை நினைவுகூர்ந்து, அவரை மற்றவர்களுக்கு அறிவிக்கும் பொன்னான காலமாக உள்ளது. தேவன் கடந்த காலத்தில் செய்தவைகளை நினைத்துப் பார்ப்பதும், இனிமேல் அவர் செய்யப்போகும் காரியங்களை விசுவாசிப்பதும், அவரைப்பற்றி மற்றவர்களோடு உரையாடுவதும் வயோதிப காலத்தை இனிமையானதாக்கும் வழிமுறையாக உள்ளது.

---

தமிழ் வேதாகமத்தின் பழைய மொழிபெயர்ப்பை அடிப்படையாகக் கொண்டுள்ள இவ்விளக்கவுரையில் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் புதிய தமிழ் மற்றும் ஆங்கில வேதாகமங்களும் உபயோகிக்கப்பட்டுள்ளன.

## (1). தமிழ்வேதாகமங்கள்

திருவிவிலியம்
Tamil Nadu Biblical, Catechetical & Liturgical Centre, Tindivanam, India, 1995.

புதிய தமிழ் வேதாகமம்
International Bible Society Lanka (Gte) Ltd, Sri Lanka, 2002.

மோனஹன் மொழிபெயர்ப்பு
The Bible Society of India, Bangalore, India.

பரிசுத்த பைபிள்
World Bible Translation Centre, Bangalore, India.

## (2). ஆங்கில வேதாகமங்கள்

| | |
|---|---|
| NIV: | New International Version |
| NASB: | New American Standard Version. |
| RSV: | Revised Standard Version. |
| NRSV: | New Revised Standard Version. |
| KJV: | King James Version |
| NKJV: | New King James Version |
| REB: | Revised English Bible. |
| JB: | Jerusalem Bible. |
| NEB: | New English Bible. |
| LB: | Living Bible. |
| GNB: | Good News Bible. |
| TEV: | Today's English Version |
| AV: | Authorized Version |

# உசாத்துணை நூல்கள்

## சங்கீதப் புத்தகத்திற்கான விளக்கவுரைகள்
## COMMENTARIES ON PSALMS


Allen, Leslie C. *Psalms 101-150: Word Biblical Commentary Volume 21*. Waco: Word Books Publisher, 1983.

Anderson, A.A. *Psalms Volume 1: New Century Bible*, London: Oliphants, 1977.

Armstrong, Edyth D. *Studies in the Psalms*. Chicago: Associated Authors, 1937.

Binnie, William. *The Psalms: Their History, Teachings, and Use*. London: Hodder and Stoughton, 1886.

Boice, James Montgomery, *Psalms Volume 2: An Expositional Commentary*. Grand Rapids: Baker Book House, 1994.

Briggs, Charles Augustus & Briggs, Emilie Grace. *Psalms: The International Critical Commentary Volume 2*. New York: Scribner's Press, 1914.

Broyles, Craig. C. *Psalms: New International Biblical Commentary*. Peabody: Hendrickson Publishers, 1999.

Brueggemann, W. *The Message of the Psalms: A Theological Commentary*. Minneapolis: Augsburg Publishing Co, 1984.

Buber, M. *Right and Wrong: An Interpretation of Some Psalms*. London: SCM Press, 1952.

Bullock, C Hassell. *Encountering the Book of Psalms*. Grand Rapids: Baker Book House, 2001.

Buttenwieser, Moses. *The Psalms: Chronologically Treated with a New Translation*. Chicago: Chicago University Press, 1938.

Calvin, John. *Commentary on the Book of Psalms Volumes 1-5*. Grand Rapids: Eerdman Publishing Company, 1949.

Clarke, Arthur G. *Analytical Studies in the Psalms*. Kansas City: Walteric Publishers, 1949.

Cohen, A. *The Psalms: An Introduction and Commentary*. London: Soncino Press, 1985.

Dahood, Mitchell. *Psalms Volume 2: Anchor Bible Commentary*. Garden City: Doubleday, 1970.

Delitzsch, Franz. *Biblical Commentary on the Psalms Volume 2*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1970.

Dickson, David. *A Commentary on the Psalms*: London: The Banner of Truth Trust, 1959.

Eaton, John. *The Psalms: A Historical and Spiritual Commentary*. London: T&T Clark International, 2003.

Flanigan, J. *Psalms: Ritchie Old Testament Commentary*. Kilmarnock: John Ritchie Ltd., 2001.

Forbes, John. *Studies on the Book of Psalms*. Edinburgh: T&T Clark, 1888.

Gaebelein, Arnos C. *The Psalms: An Exposition*. Neptune: Loizeaux Brothers, 1965.

Harris, Arthur Emerson. *The Psalms Outlined*. Philadelphia: Judson Press, 1948.

Kidner, Derek. *Psalms 1-72: Tyndale Old Testament Commentaries* Leicester: Inter Varsity Press, 1975.

Kirkpatrick, A.F. Psalms: *Cambridge Bible Commentary*. Cambridge: Cambridge University Press, 1902.

Knight, George A.F. *Psalms Volume 2: The Daily Study Bible*. Philadelphia: The Westminster Press, 1982.

Kraus, H.J. *Psalms 60-150: A Continental Commentary* . Minneapolis: Fortress Press, 1993.

Leslie, Elmer A. *The Psalms In the Light of Hebrew Life and Worship*. Nashville: Abingdon Press, 1949.

Leupold, H.C. *Exposition of the Psalms*. Grand Rapids: Baker Book House, 1972.

Mays, James L. *Psalms: Interpretation*. Louisville: John Knox Press, 1989.

Motyer, J.A. *Psalms: New Bible Commentary – 20th. Century Edition*. Leicester/ Downers Grove: Inter Varsity Press, 1994.

Oesterley, W.O.E. *The Psalms: Translated with Text-Critical and Exegetical Notes*. London: SPCK, 1962.

Plumber, W.S. *Psalms: The Geneva Series of Commentaries*. Edinburgh: The Banner of Truth Trust, 1975.

Phillips, John. *Exploring the Psalms. Volume 2. Neptune*: Loizeaux Brothers, 1988.

Phillips, Richard D. *Walking With God: Learning Discipleship in the Psalms*. Edinburgh: The Banner of Truth Trust, 2005.

Ross, Allen P. *Psalms: The Bible Knowledge Commentary Old Testament*. Wheaton: Victor Books, 1985.

Scroggie, W.Graham, *A Guide to the Psalms*. Grand Rapids: Kregel Publications, 1995.

Spurgeon, C. H. *The Treasury of David: An Updated Edition inToday's Language*. Nashville: Thomas Nelson Publishers, 1997

Terrien, Samuel. *The Psalms: Strophic Structcture and Theological Commentary*. Grand Rapids: Eerdmans, 2003.

Thomas, Derek, *Help for Hurting Christians: Reflections on Psalms*. Darlington: Evangelical Press, 1991.

VanGemeren, Willem A. *Psalms: The Expositor's Bible Commentary Volume 5*. Grand Rapids: Zondervan Publishing House, 1991.

White, R.E.O. *A Christian Handbook to the Psalms*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1984.

Williams, Donald M. *Psalms 1-72: The Preacher's Commentary*. Nashville: Thomas Nelson Publishers, 1986.

Weiser, Artur. *Psalms: The Old Testament Library*. Philadelphia: The Westminster Press, 1962.

## ஏனைய நூல்கள்
## OTHER RELATED BOOKS

Alexander,W.M. "St.Paul's Infirmity" in *Expositor's Times*. 15 (1904), p.469-473.

Clarke, *W.K.L. New Testament Problems*, London: SPCK, 1929.

Enns, Paul. *The Moody Handbook of Theology*. Chicago:Moody Press, 1989.

Grudem, Wayne. *Systematic Theology: An Introduction to Biblical Doctrine*. Leicester: Inter Varsity Press, 1994.

Mullians, T.Y. "Paul's Thorn in the Flesh" in *Journal of Biblical Literature*. 76 (1957), pp. 299-303;

Renn, Stephen D. *Expository Dictionary of Bible Words*. Peabody: Hendrickson Publishers, Inc., 2005.

Swindoll, C.R & Zuck, R.B. ed. *Understanding Christian Theology*. Nashville: Thomas Nelson Publishers, 2003.

Wolff, H.W. *Anthropology of the Old Testament*. Philadelphia: Fortress Press, 1974.

## வேதஆராய்ச்சியாளர் எம்.எஸ்.வசந்தகுமார் எழுதிய ஏனைய நூல்கள்

1. இன்பத்தின் இரகசியங்கள்
   யோவான் 15ம் அதிகாரத்திற்கான விளக்கவுரை.
2. இயேசுகிறிஸ்து யார்?
   ஏழு சுயவெளிப்பாட்டு கூற்றுக்களின் விளக்கவுரை.
3. வேதாகமம் தேவனுடைய வார்த்தையா?
   வேதாகமம் தேவவார்த்தை என்பதற்கான சான்றுகள்.
4. இது ஒரு கிறிஸ்தவ குடும்பம்
   கிறிஸ்தவ குடும்பம் பற்றிய வேதாகமப் போதனை
5. மரணத்தின் மறுபக்கம்
   மரணத்தின் பின்பான வாழ்வு பற்றிய போதனை
6. இயேசுகிறிஸ்து இறைவனா?
   இயேசுவின் தேவத்துவத்திற்கான ஆதாரங்கள்
7. கிறிஸ்தவ வாழ்வில் தேவசித்தம்
   கிறிஸ்தவ வாழ்வுக்கான நடைமுறை சத்தியங்கள்
8. இயேசுகிறிஸ்து ஒரு சரித்திர நபரா?
   இயேசு இவ்வுலகில் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள்
9. திருமறையும் திருமணமும்
   திருமணம், விவாகரத்து, மறுவிவாகம் பற்றிய நூல்
10. புனித வேதாகமத்தின் புதுமை வரலாறு
    வேதாகமம் உருவான சரித்திர விடயங்கள்
11. யெகோவாவின் சாட்சிகளுக்கு கிறிஸ்தவனின் பதில்கள்
    யெகோவாவின் சாட்சிகளுக்கு பதிலளிக்கும் முறை
12. கர்த்தரின் வார்த்தைகளில் கடினமான வரிகள்
    இயேசுவின் கடினமான கூற்றுகளுக்கான விளக்கம்
13. ஒரு விதவையின் விவாகம்
    ரூத் புத்தகத்திற்கான விளக்கவுரை
14. ஓடிப்போனவன்
    யோனா தீர்க்கதரிசியின் நூலுக்கான விளக்கவுரை
15. ஒரு விலைமகள் விசுவாசியாகின்றாள்
    ராகாபின் வாழ்விலிருந்து வேதபாடங்கள்
16. மகளைபே பலியிட்ட மனிதன்
    யெப்தாவின் வாழ்வுச் சரிதைக்கான விளக்கவுரை
17. விபரீதமான வீரன்
    சிம்சோனின் வாழ்விலிருந்து வேதபாடங்கள்
18. ஆத்தும தாகத்திற்கு அற்புதத் தண்ணீர்
    சமாரியப் பெண்ணின் வாழ்விலிருந்து வேதபாடங்கள்
19. தேவனின் பாதத்தைத் தேடிவந்த பாவை
    மரியாளின் வாழ்விலிருந்து வேதபாடங்கள்
20. சங்கீதங்களின் சத்தியங்கள்
    சங்கீதப் புத்தகத்திற்கு ஒரு அறிமுகம்.
21. கர்த்தரின் பராமரிப்பில் களிகூர்ந்திடும் பக்தன்
    23ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை
22. மனுக்குலத்திற்கான மகத்தான வெளிப்படுத்தல்
    19ம் சங்கீதத்திற்கான இறையியல் விளக்கவுரை
23. மனக்கலக்கத்திற்கு மருந்து
    42ம் 43ம் சங்கீதங்களுக்கான விளக்கவுரை
24. துன்மார்க்கரின் வளமும் நீதிமானின் துயரமும்
    73ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை

# தமிழ் வேதாகம ஆராய்ச்சி மையம்
# TAMIL BIBLE RESEARCH CENTRE

தமிழ் வேதாகம ஆராய்ச்சி மையம் 2005ம் ஆண்டு வேத ஆராய்ச்சியாளர் எம்.எஸ்.வசந்தகுமாரினால் இங்கிலாந்தில் உருவாக்கப்பட்டது. வேதாகமப் புத்தகங்களுக்குத் தமிழ் மொழியில் விளக்கவுரைகள் எழுதி வெளியிடுவதே இந்த ஆராய்ச்சி மையத்தின் முக்கிய செயற்பாடாகும். இதன் ஆராய்ச்சிகளில் சிலவற்றை நீங்கள் இணையதளத்தில் வாசிக்கலாம். முகவரி: www.tamilbibleresearchcentre.com

The Tamil Bible Research Centre was founded in 2005 by M.S. Vasanthakumar, biblical scholar and researcher to produce Bible study materials and commentaries in Tamil language. For the latest research materials visit: www.tamilbibleresearchcentre.com

**எம்.எஸ்.வசந்தகுமாரின் புத்தகங்கள் கிடைக்குமிடங்கள்**

**இலங்கையில் தொடர்புகளுக்கு**

திரு. மில்டன், தொலைபேசி: 011 2345654

**இந்தியாவில் தொடர்புகளுக்கு**

திரு. கே.பழனிவேல் ஆபிரகாம்
சத்தியவசனம், தொலைபேசி: 0452 2532316

**சிங்கப்பூரில் தொடர்புகளுக்கு**

திரு. சொலமன் டேவிட்
தொலைபேசி: 65 64587708, 65 94895876

**கனடாவில் தொடர்புகளுக்கு**

திரு. அருள்பிரகாசம்
தானியேல் கிறிஸ்தவ புத்தக சாலை
தொலைபேசி: 416 7578278

**ஐரோப்பாவில் தொடர்புகளுக்கு**

தமிழ் வேதாகம ஆராய்ச்சி மையம்
தொலைபேசி: 0044 (0)208 281 4678

# வயோதிப காலத்திலும் வழிநடத்தும் கர்த்தர்

## 71ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை

மானிட வாழ்வில் வயோதிப காலம் சரீர பலவீனமும் மனச் சோர்வும் நிறைந்துள்ள காலமாகும். உலகத்தினாலும் உறவினர்களினாலும் கைவிடப்பட்டு, தனிமையிலும் வியாதிகளிலும் பாதிக்கப்பட்டு, விரக்தியுடன் வாழும் வயோதிப காலத்திலும் தேவன் நம்மைக் கைவிடாதவராக இருக்கின்றார். வயோதிப காலத்தில் தேவன் எவ்வாறு தம்முடைய பிள்ளைகளை வழிநடத்தி, வாழ்வை அர்த்தமும், பயனும், மகிழ்ச்சியும் உள்ள வாழ்வாக மாற்றுகிறார் என்பதை இந்நூல் உங்களுக்கு அறியத்தருகின்றது.

# THE GOD WHO CARES FOR THE OLD

(An Expository Study on Psalm 71)

M. S. VASANTHAKUMAR

இலங்கையில் பதினாறு வருஷங்களாக வேதாகம விரிவுரையாளராகவும், சஞ்சிகை ஆசிரியராகவும் பணியாற்றிய வேத ஆராய்ச்சியாளர் எம். எஸ். வசந்தகுமார், தற்பொழுது இங்கிலாந்திலுள்ள தமிழ் வேதாகம ஆராய்ச்சி மையத்தில் வேதாகமப் புத்தகங்களுக்கு விளக்கவுரைகள் எழுதி வெளியிடும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

சத்தியவசனம்
9, வெங்கட்ராமன் தெரு, சின்னசொக்கிக்குளம், மதுரை.
தொ.பே.: 0452 2532316 மின்னஞ்சல் : svmadurai@eth.net